விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 சித்திரை 29 றம்ழான் 2 இதழ் 90

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 12 5-1986

## எயர் லங்கா தமிழ் பொறியியலாளர்கள் ராஜினுமா செய்வர்?

[கொழும்பு]

எயர்-லங்கா விமான சேவையில் கடமையாற்றும் சுமார் 60 தமிழ் பொறியியலாளர்களும், தொழில்நுட்பவியலாளர்களும் தங்கள் பதவிகளை ராஜினுமா செய்யவேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகியிருப்பதாக சிங்களப் பத்திரிகையொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இவர்களில் 28 பேர் கடந்த வெள்ளிக்கிழமை தமது ராஜினுமாக் கடிதங்களை சமர்ப்பித்துள்ளதாக மிகவும் நம்பகரமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி அப் பத்திரிகை கூறுகிறது.

சிங்கப்பூர், பிரிட்டன் ஆகிய நாடுகளில் பயிற்சிபெற்ற இந்த ஊழியர்கள் ராஜினுமாச் செய்தால் எயர்-லங்கா சேவையின் தொழிநுட்பத் துறைக்குப் பெரும் இழப்பாகும் எனத் தெரிவித்துள்ள இப்பத்திரிகைச் செய்தியில் இவர்களைப் பயிற்றுவிப்பதற்காக இலங்கை அரசு சுமார் மூன்று லட்சம் முதல் ஐந்துலட்சம் ரூபா

[7ம் பக்கம் பார்க்க]

# ● வடக்கு,கிழக்கிற்கு மட்டுப்படுத்தப்பட்ட சமஷ்டி
# தமிழ்த் தலைவர்கள் ஏற்காவிடில்
# ராணுவத் தீர்வே முடிவு

UNIVERSITY OF SRI LANKA RECEIVED 1986 LIBRARY

## எதிர்ப்புத்தினம்

[யாழ்ப்பணம்]

''தமிழ்ப் பேசும் மக்கள் ஒடுக்கப்படுவதற்கு எதிரான போராட்டத்திற்கான இணைப்புக்குழு'' எதிர்வரும் 15ம் திகதி வியாழக்கிழமை நடாத்தவிரு

(7ம் பக்கம் பார்க்க)

## லண்டன் பத்திரிகைக்கு ஜே. ஆர். பேட்டி

(லண்டன்)

''வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு இலங்கை அரசு வழங்க முன்வந்துள்ள மட்டுப்படுத்தப்பட்ட சமஷ்டி அமைப்பினைத் தமிழ்த் தலைவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கின்றேன். இல்லையெனில் ராணுவததீர்வை மேற்கொள்வதன்றி பிரச்னையைத் தீர்க்க வேறுவழியில்லை.''

இலங்கை ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன லண்டனிலிருந்து வெளிவரும் ''சண்டேடைம்ஸ்'' பத்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டியொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார்

இனப்பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு இலஙகை அரசு அண்மையில் தெரிவித்துள்ள திட்டத்தில் முன்னைக்காலங்களில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகளிலும் அதிகளவில் பயனளிக்கக்கூடிய விதத்தில் தாப் யோசனை தெரிவித்திருப்பதாகவும் திரு. ஜயவர்த்தன இப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தனிநாடு கோரிப்பேராடிவரும் தீவிரவாதிகளுக்கெதிராக நடவடிக்கைகள் எடுப்பதற்காக மேற்சத்திய நாடுகள் ராணுவரீதியிலும் நிதி வகையிலும் தமக்கு உதவி புரியவேண்டும் என அப்பேட்டியில் வேண்டுகோள் விடுத்துள்ளார் இந்தஉதவியின்றேல் தமது நாடு சைப்பிரசைப் போன்று பிளவுபடுவதாகவே

[7ம் பக்கம் பார்க்க]

## யாழ் –கொழும்பு வாகனங்கள் 4மணிநேரம் கொக்காவிலில் தடுக்கப்பட்டன

[வவனியா]

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற வாகனங்கள் நேற்று முன்தினம் கொக்காவிலுக்கும் மாங்குளத்திற்குமிடையில் இராணுவத்தால், தடுத்து வைக்கப்பட்டன.

காலை பதினெரு மணி தொடக்கம் மாலை மூன்று மணி வரையும் இவ்வாகனங்கள் தடுத்து வைக்கப்பட்டன.

[7ம் பக்கம் பார்க்க]

## புதிய ராணுவ முகாம்கள் அமைக்கப்படுவது ஏன்! லலித் விளக்கம்

[மட்டக்களப்பு]

''அரசு சமாதானத் தீர்வையே விரும்புகிறது. அச்சமாதானத் தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கையிருக்கிறது. ஆனல் தீவிரவாதிகள் தொடர்ந்து ஆயுதப்போராட்டத்தை நடாத்திவருகிறுர்கள்''

இவ்வாறு அம்பாறை இராணுவமுகாமில் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறுவதை முன்னிட்டு நேற்று நடந்த வைபவத்தில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி பேசுகையில் கூறினுர்.

அவர்மேலும் கூறியதாவது: தீவிரவாதிகள் ஆயுதப் போராட்டம் நடாத்திவருவதால்தான் அரசு புதியமுகாம்

[7ம் பக்கம் பார்க்க]

## இலங்கை ஆலோசனைகள்: புதிய விளக்கங்களுடன் திலகரத்ன டில்லி செல்வார்

[சென்னை]

கடந்த மாத இறுதியில் இலங்கை சென்றிருந்த இந்திய உயர் மட்டக்குழுவின் விஜயத்தையடுத்து இலங்கையில சட்ட' ஒழுங்கு நிலையில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாக இக்குழுவின் அங்கத்தவர்களின் ஒருவரான திரு ரொபேஷ் பண்டாரி சென்னையில் தெரிவித்துள்ளார்.

பி ரி ஐ' செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியொன்றில் இதனைக்குறிப்பிட்ட திரு பண்டாரி, சடந்த 15 நட்களாக இலங்கையில் அரச படையினருக்கும தமிழ்த் தீவிரவாதிகளுக்குமிடையில் எவ்விதமேதல்களும் ஏற்படவில்லையென்றும் இது எவ்வளவு காலத்துக்கு நீடிக்குமெனத் தெரியாது எனவும் கூறினுர்.

**மத்திய அரசு மதிப்பீடு**

இலங்கை அரசு அண்மையில் சமர்ப்பித்த ஆலோசனைகள் பற்றி திரு பண்டாரி கருத்துத்தெரிவிக்கையில் இவ்வாலோசனைகளை இந்திய மத்திய அரசு தற்போது மதிப்பீடுசெய்து வருகின்றதென்

[7ம் பக்கம் பார்க்க]

## 'ரெலோ' தலைவர் செல்வம்

[சென்னை]

'ரெலோ' எனப்படும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் இராணுவத் தளபதியாக 'செல்வம்' என்பவர் நியமிக்கப்பட்டிருப்பதாக அவ்வியக்கம் அறிவித்துள்ளது.

'ரெலோ இயக்கத்தலைவர் திரு. ஸ்ரீசபாரத்தினம் அண்மையில யாழ்ப்பாணம் கோண்டாவிலில் சுட்டுச்கொல்லப்பட்டதாக அறிவிக்சப்பட்டிருந்தது தெரிந்ததே

## முத்திரைச்சந்தையில் நேற்று 300 அகதிகள் மறியல்

[யாழ்ப்பாணம்]

அகதிகள் பிரச்னையைத் தீர்க்குமாறு கோரி நல்லூர் சங்கிலியன் புனர்வாழ்வுக் கழக அகதிகள் முகாமைச் சேர்ந்த சுமார் 300 அகதிகள் மூட்டை முடிச்சுகள், பெட்டி படுக்கைகளுடன் ஊர்வலமாகச் சென்று முத்திரைச் சந்தை வைரவர் கோவில் வீதியில் மறியல் செய்தனர்.

(7ம் பக்கம் பார்க்க)

## ஆண்களும் கருவுறச் செய்யலாம்

[லண்டன்-ராய்ட்டர்]

கருவை குடலினுள் செலுத்துவதன்மூலம் ஆண்களும் கருத்தரிக்கச் செய்யும் சாத்தியம் இன்னும் ஐந்து வருடகாலத்தில் தோன்றுமென பிரிட்டிஷ் சஞ்சிகையான 'நியூ செைசட்டி' தகவல் வெளியிட்டுள்ளது. [ய-செ]

## யாழ். ஆஸ்பத்திரியில் ஒட்சிசன் இல்லை: நோயாளர்கள் இறக்கின்றனர்

[யாழ்ப்பாணம்]

யாழ். பொதுவைத்தியசாலையில் ஒட்சிசன் இல்லாமையினுல் நோயாளர்கள் இறப்பதைத் தவிர்க்க முடியாதுள்ளதுஎன யாழ் பொது வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்கம் தெரிவிக்கிறது.

கடந்த ஒரு மாதகாலமாக இவ்வைத்தியசாலையில் ஒட்சிசன் இல்லை. இதனால் அவசர சத்திர சிகிச்சைகளும் மற்றும் சிகிச்சைகளும் மேற்கொள்ளமுடியாது பல நோயாளிகள் பாதிப்புறுகின்றனர் என்றும் மேற்படி சங்கம் அறிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக போதனு வைத்தியசாலைகளின் அமைச்சுக்கு உடனடித்தந்தி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படும் ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு பெண்கள் தேவை. தையல் அனுபவமுள்ளவர்களும், வெட்டுபவர்களும், முன் அனுபவம் உள்ளவர்களும் விரும்பத்தக்கது. 20. 5. 86 க்கு முன் தொடர்புகொள்ளவும். விளம்பரஇல, C2261, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். C- (2261)

## விற்பனைக்கு

பூரண விளை திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு கிலோ 250/- பிள்ளையார் மெற்றல் வேர்ஸ், 257 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [C 2222]

நாவற்குளி-கைதடியில் கேரதீவு வீதியில், ரயில்வே கடவையின் முன்பாக நல்ல நிலைமையிலமைந்த, புதிதாகக் கட்டப்பட்ட வீடு 4 பரப்புக் காணியுடன் மலிவு விலையில் உடன் விற்பனைக்குண்டு. முகவரி: பொ. விசாகப்பெருமாள், 125. கன்னுதிட்டி வீதி, யாழ்ப்பாணம். [C-2241]

நல்ல நிலையில் உள்ள 30 ஶ்ரீ 2000 தொடரிலக்க 160 ஸ்கூஸ் சுப்பர் பிரயாணிகள் மினிவான் விற்பனைக்குண்டு. எஸ். மகேந்திரன் பாட்ஸ் கடை, பரமேஸ்வரா சந்தி, யாழ்ப்பாணம். (C- 2270)

## சேவை

(Typewriters) தட்டச்சு இயந்திரங்கள் சிறந்தமுறையில் திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: Fudo Enterpriscs, 39/17, மின்சார நிலையவீதி, [3-ம் ஒழுங்கை] யாழ்ப்பாணம். [C 2245]

குறைந்த செலவில் தரமான — தெளிவான 'போட்டோஸ்ரட்' பிரதிகள், ''ரோணியோ'' பிரதிகளுக்கும் விரைவான தமிழ்—ஆங்கில ''ரைப்பிங்'' வேலைகளுக்கும் நீங்கள் நாடுமிடம்: 'குவீன்கட்', 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (C 2268)

### மாந்தை வடக்கு பல நோ. கூ. சங்கம் அடம்பன்

## வெற்றுச்சாக்கு விற்பனை

மாந்தை வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 4497 வெற்றுச்சாக்குகள் விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்ய விரும்புவோர் தமது கேள்விகளை மீள அளிக்கும் வைப்புப்பணமாக ரூபா 250/-ம் கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 25-ம் செலுத்தி சங்கத்தில் பெறும் படிவத்தில் 30-05-86 வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன் பொது முகாமையாளர், மாந்தை, வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அடம்பன் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். சாக்குகளை பார்வையிட விரும்புவோர் வேலைநாட்களில் காலை 8-00 தொடக்கம் மாலை 5-00 வரை பார்வையிடலாம்.

(A 645)

## வகுப்புகள்

ரேடியோ and, TV வெல்டிங், வயறிங், மோட்டர் மெக்கனிசம். பிளம்பிங் (நீர்க்குழாய் பொருத்துதல்), தட்டெழுத்து, சுருக்கெழுத்து வகுப்புகள் 17-05-86இல் ஆரம்பமாகின்றன. கட்டணம் மிகக்குறைவு. பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering. 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (C 2264)

## தவறிவிட்டது

10-5-86 யாழ்ப்பாணம்—பருத்தித்துறை செல்லும் மினிவானில் கோயில் நிதிக்காக சேகரிக்கப்பட்ட பணம் தவறிவிட்டது. இதைக் கண்டவர்கள் மனிதாபிமான அடிப்படையில் கீழுள்ள முகவரியில் ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன், இ. நவரத்தினம், 27/4, வைமன் ரோட், யாழ்ப்பாணம். [C 2277]

### யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை

## பகிரங்க ஏல விற்பனை

கீழ்க்காணும் பாவிக்கப்பட்ட பாவிக்கப்படாத பொருள்கள் எதிர்வரும் 14-5-1986 திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் பல்கலைக்கழக வளவில் ஏலத்தில் விற்கப்படும்.

ஏல விற்பனையின் போது வெற்றிபெறுவோர் அப்பொருள்களுக்கான முழுப் பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி பொருள்களை பல்கலைக்கழக வளவில் இருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

**பொருள்கள் விபரம்:**

1. பாவிக்கப்பட்டவை
   - i. உதைபந்துகள்
   - ii. கைப் பந்துகள்
   - iii. நீர் சூடாக்கிகள் (Heaters)
   - iv. கூட்டல் இயந்திரம் (Calculators)
   - v. உருப் பெருக்குக் காட்டிகள் (Microscopes)
   - vi. துவிச் சக்கரவண்டிகள்
   - vii. சுவர்க் கடிகாரங்கள்
   - viii. தண்ணீர் வடிகட்டிகள்
   - ix. போட்டோ பிரதி செய்யும் இயந்திரம் (Cannon
   - x. முறிந்த கதிரைகள்
   - xi. குளிர் சாதனப்பெட்டி (Deep Freezer)
   - xii. ஒரு தொகுதி வெற்றுப் பெட்டிகள்
   - xiii. பழைய புதினப் பத்திரிகைகள்.
2. பாவிக்கப்படாதவை
   - i. முன்னைய ஆண்டிற்குரிய எழுதப்படாத தினக் குறிப்புகள்.
   - i. மூன்று சக்கர மோட்டார் வண்டிக்கான ரயர்களும் ரியூப்களும்.

பதிவாளர்.

A 647

## 'செல்வா' கழகம் முதலிடம்

[வவனியா]

விளையாட்டு அமைச்சின் அனுசரணையுடன்நெடுங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில் குளவிசுட்டான் செல்வா விளையாட்டுக் கழகம் முதலிடத்தினைப் பெற்றுக்கொண்டது.

இரண்டாம், மூன்றும் இடங்களை முறையே சின்னப்பூவரசன்குளம் ஸ்புட்னிக்கழகமும், நெடுங்கேணி ஜெட்லைனஸ் கழகமும் பெற்றுக்கொண்டன. நெடுங்கேணி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இப்போட்டிகள் இடம்பெற்றன.

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

## பின்னுறுதிக் கட்டளை

இல. தத்துவம்/272.

வாரியப்புலம், சுன்னாகத்தைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை சண்முகசுந்தரம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயத்தில்

மரணமெய்தியவர்.

தம்பிப்பிள்ளை சண்முகசுந்தரம் கைம்பெண் நாகராணி.
வாரியப்புலம், சுன்னாகம்.
மனுதார்.

எதிர்

1. சண்முகசுந்தரம் மகன் சிவரூபன்.
2. சண்முகசுந்தரம் மகன் ஶ்ரீகரன்.
3. சின்னத்தம்பி ஆறுமுகசாமி (பராயமடையாத 1ம், 2ம் எதிர்மனுதார்களின் பாதுகாவலராக நியமிக்கப்படவேண்டியவர்) எல்லோரும் வாரியப்புலம், சுன்னாகம்.

பிரதிவாதிகள்.

இந்த விடயம் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருவாளர் க. வி. விகனேஸ்வரன் அவர்கள் முன்பாக 198்ம் ஆண்டு மர்ச் மாதம் 26ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மனுதாரின் சார்பில் அவரின் பதிவுபெற்ற சட்டத்தரணிகளான ''நடராசாவும் சபாநாதனும்'' பிரசன்னமாக இருந்து மனுதாரின் மனு, சத்தியக்கடதாசி ஆகியவற்றை மன்று படித்து மேலும்அவவின் சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்களையும் கேட்டு திருப்தியடைந்தன் பிரகாரம் பின்வருமாறு பின் முற்ருக்கும் கட்டளை வழங்கப்படுகிறது.

இவ்விடயத்தில் அக்கறையுள்ள நபர் எவரேனும் 1986ம் ஆண்டு மே மாதம் 28ம் திகதி காலை 9 மணிக்கு இம் மன்றில் தோன்றி தகுந்த காரணம் எதுவும் இருப்பின் அவற்றை இம் மன்றில் தெரிவித்தால் அன்றி மேல் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் நிர்வாகத் தத்துவப் பத்திரம் மனுதாருக்கு வழங்கப்படுமென்றும் மற்றும் பராயமடையாத 1ம், 2ம் எதிர் மனுதாரார்களுக்கு மேற்குறித்த 3ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கின் நோக்கங்களுக்காக பாதுகாவலராக நியமிக்கப்படுவாரென்றும் இத்தால் மேலும் கட்டளை இடப்படுகிறது.

1986ம் ஆண்டு மார்ச் மாதம் 26ம் திகதி.

மாவட்ட நீதிபதி
மல்லாகம்.

எம்மால் வரையப்பட்டது.

நடராசாவும் சபாநாதனும்
மனுதாரின் பதிவுபெற்ற
சட்டத்தரணிகள்.
(C 2250)

## மஹோற்சவம்

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி அருள்மிகு கும்பழாவளைப்பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இம் மாதம் 13ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று 22ம் திகதி வியாழக்கிழமையன்று தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன.

### சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது), சுன்னாகம்.

## அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் 1500க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகளும், கழிவு சீனியும் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச்சாக்குகளுக்கு ரூபா 250/-ம் ஏனையவற்றிற்கு ரூபா 50/-ம் மீளளிப்பு வைப்புப் பணமாகச் சங்கத்தில் செலுத்திச் சங்க வேலை நாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

17-5-1986 சனிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்.
12-5-86. (A 653)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



**பொ. ஜெயசோதி**
[அதிபர் இலகடி இ. த. க. பாடசாலை, காரைநகர்]

தோற்றம்: 29-09-1938
மறைவு: 15-04-86

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் எமது உயர் வாழ்விற்கு வழி காட்டியாய், அன்புக்கு அணிகலனாய், பாசத்திற்குப் பிறப்பிடமாய் விளங்கிய அன்புத் தெய்வமே திடீரென எங்களை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டுப் பிரிந்தாலும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மரணச்சடங்கில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கிறோம்.

அத்துடன் 15-5-86 வியாழக்கிழமை பொன்னம்பலம் வீதி காரைநகர் இல்லத்தில் நடைபெறும் உத்தரக்கிரியையிலும் பங்குபற்றுமாறு உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி: திருமதி ஜெ. பரமேஸ்வரி
[ஆசிரியை யாழ்ரன் கல்லூரி, காரைநகர்]
மக்கள்: பவானி, ஜெயலன்.

C 2271

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை**
[உப-தபாலதிபர், இலுப்பைக்கடவை மன்னார்]

தோற்றம்: 14-04-1924
மறைவு: 14-04-1986

கடந்த 36 வருடங்கள் உப-தபாலதிபராகக் கடமையாற்றியவரும், எம் குடும்பத்துக்கு வழிகாட்டியாயுமிருந்த எமது அன்புத் தெய்வத்தின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

அவரது இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும், எமது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 14-05-86 அன்று நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மனைவி, மக்கள், மருமகன்.

C 2258

## 22-ம் ஆண்டு நினைவஞ்சலியும் எனது இறுதி அஞ்சலியும்



**மகேஸ்வரி (பிள்ளை)**

தோற்றம்: 22-05-1922
பிரிவு: 22-05-1964
திதி: 12-05-1986

தெய்வமே என்னை உணர்ந்தாய் உன்னை உணர வைத்து வழிகாட்டி பிரிவிலும் வாழ்விலும் சிறப்பித்தாய், சிநதித்தேன் இனம் கண்டேன் என் இறுதி அஞ்சலியுடன் குழநதைகள் பணிதொடரட்டும்.

பிறப்பகம்: கரம்பொன் சுந்தரம் வீடு.
புகுந்தகம்: கரம்பொன் அன்னப்பிள்ளை வீடு

கணவன்:
பொன்னுத்துரை
[பாலா பான்சி ஹவுஸ், ஊர்காவற்றுறை.]

பிள்ளைகள்:
சந்திரசேகரம்-புஸ்பராணி குடும்பம்.
சர்வானந்தம் குடும்பம், [நியூ ஆனந்தாஸ் மூவி, யாழ்ப்பாணம்.]
கிருபானந்தன் குடும்பம் மேற்கு ஜேர்மனி.

C 2255

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்களாதேஷ் தேர்தல்:

# மோசடிகளை எதிர்த்து பொதுவேலை நிறுத்தம்!

## அவாமிலீக் வேண்டுகோள்

டாக்கா, மே. 11

பங்களாதேஷ் பொதுத்தேர்தலில் இடம்பெற்ற மோசடிகளை எதிர்த்து எதிர்வரும் புதன்கிழமை ஆறு மணித்தியாலப் பொது வேலைநிறுத்தமொன்றினை மேற்கொள்ளும்படி பிரதான எதிர்கட்சியான அவாமி லீக் சகல தரப்பினருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேர்தலின்போது பல இடங்களில் வன்செயல்கள் இடம்பெற்றமைக்கு அரசாங்கக்கட்சியே காரணம் என்று குற்றம் சுமத்தியுள்ள அவாமி லீச்கின் தலைவர் ஜனாப் ஷேக் அஜீனா வஜீத் மோசடிகள் இடம்பெற்ற சுமார் நூற்றுக்கு அதிகமான தொகுதிகளில் மீண்டும் தேர்தலை நடத்தும்படியம் வலியுறுத்தியுள்ளார்

எதிர்க்கட்சிகளின் இந்தக்குற்றச்சாட்டினை வன்மையாகக் கண்டித்துள்ள பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாத் வன்முறைகள் இடம்பெற்ற இடங்களில் மீண்டும் தேர்தலை நடத்த ஒப்புக்கொண்டுள்ளதாகவும்கூறப்படுகிறது.

இதேவேளை பங்களாதேஷ் இப்போதுயொருபிரிட்டிஷ்குடியேற்ற நாடல்ல என்று கூறியுள்ள அரசியல் வட்டாரங்கள் ஜனாதிபதி எர்ஷாத் தேர்தலில் வெற்றியீட்டினுல்கூட அவர் தொடர்ந்து அரசாங்கத்தில் இருக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்று கருத்து வெளியிட்டுள்ளன.

இது இவ்வாறிருக்க வன்செயல்களைத் தொடர்ந்து 116 தொகுதிகளுக்கான முடிவுகளை தேர்தல் ஆணைக்குழு தடுத்து வைத்திருந்தபோதும் அவைகளில் 16 தொகுதிகளின் முடிவுகளை நேற்று முன்தினம் அறிவித்துள்ளது இதனடிப்படையில் எதிர்க்கட்சிகள் முன்னணியில் நிற்பதாகவும், பிரதான எதிர்க்கட்சியான அவாமி லீக் 62 இடங்களைக் கைப்பற்றியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. (ரா)

## கலாட்டா செய்தவரை பொதுமக்கள் தாக்கினர்

(கிளிநொச்சி)

காணி அலுவலகத்திற்குள் புகுந்து கலாட்டா பண்ணிய கிளிநொச்சி பிரஜைகள்குழு உறுப்பினரொருவர் பொதுமக்களால் பலமாகத் தாக்கப்பட்ட சம்பவமொன்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி பிரஜைகள்குழு உறுப்பினரும் இடதுசாரிக் கட்சி ஒன்றின் மாவட்ட அமைப்பாளரும், வைத்தியருமான அந்நபர் கிளிநொச்சி காணி அலுவலகத்திற்குச் சென்று மேலதிக அரசாங்க அதிபரைச் சந்தித்து காணி அலுவல் ஒன்று சம்பந்தமாகக் கதைத்தாராம்.

விசாரணை செய்து இதுசம்பந்தமாக முடிவெடுக்கப்படுமெனவும், இப்போது பொதுமக்கள் பல காணி அலுவல்கள் சம்பந்தமாக வெகுநேரமாகக் காத்திருப்பதாகவும், கூறிய மேலதிக அரசாங்க அதிபர், பிறிதொருதினத்தில் வந்து சந்திக்கும்படி கூறினாராம்.

மற்றவர்களுக்குக் கூறுவது போல தனக்குக் கூறவேண்டாமெனவும், உடனடியாகச் செய்து தராவிட்டால் அதன் பயனை நீங்கள் பின்னர் அனுபவிக்கவேண்டிவரும் என்று கூறிய அவர், தூஷண வார்த்தைகளாலும்அவ்வதிகாரியைப் பேசினாராம்.

இவற்றைப் பொறுமையுடன் பார்த்துக்கொண்டு நின்ற பொதுமக்கள் அந்த நபரை நோக்கிச் சென்று நீர் பிரஜைகள்குழு உறுப்பினர் என்றாலும் சரி, தொழிற்சங்கவாதி என்றாலும்சரி, அலுவலகத்தில் நின்று சத்தம்போட வேண்டாம்'' என்றனர்

அவர் தொடர்ந்தும் சத்தம் போடவே பொதுமக்கள் அவரைப் பலமாகத் தாக்கியதுடன் இழுத்துக் கொண்டு வந்து அலுவலகத்திற்கு வெளியில் விட்டனர்.

## உலகச் செய்திகள்

### ''வளைகுடா யுத்தம்:

## புனித ரம்ழான் மாதத்திலாவது சண்டையை நிறுத்துக!''

### அரபுத்தலைவர்கள் கோரிக்கை

டெஹறான், மே. 11

புனித ரம்ழான் மாதத்திலாவது வளைகுடா யுத்தத்தை ஒரளவு நிறுத்திவைக்குமாறு ஈரான்—ஈராக் ஆகிய இரு நாடுகளுக்கும் அரபுத் தலைவர்கள் கோரிக்கையொன்றினை விடுத்துள்ளனர்.

இதேவேளை வளைகுடாப் போரில் குர்திஸ் தான் பகுதியிலுள்ள பஸ்தான் நகருக்கு அருகில் தாம் பெரும் தாக்குதல் ஒன்றினை மேற்கொண்டுள்ளதாக ஈரான் அறிவித்துள்ளதுடன்; சென்ற வெள்ளிக்கிழமை ஈராக் சண்டையைத் துவக்கிய மிஸாம் பகுதியில் தீவிர சண்டை நடந்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

இப்பகுதியில் ஈரானின் நூறு ச. மீட்டர் நிலப்பரப்பைதாம் கைப்பற்றி யுள்ளதாக முன்பு ஈராக் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ரா)

## 9 பேர் பலி 21 பேர் காயம்

புதுடில்லி, மே 11

மகாராஷ்டிரத்தில் இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதலொன்றின்போது 9 பேர் பலியாகியுள்ளதுடன் 21 பேர் காயமடைந்துள்ளார்கள்.

அங்கு இடம்பெற்ற ஊர்வலமொன்றின் மீது சில விஷமிகள் கல் வீசியதைத் தொடர்ந்தே இந்தக் கலகம் ஏற்பட்டுள்ளது [ரா]

## நோர்வேயில் ஆட்சிமாற்றம்

# புதிய அமைச்சரவையில் 50 வீதம் பெண்கள்!

லண்டன், மே. 11

சிறுபான்மை பலத்தைக் கொண்ட தொழிற்கட்சி நோர்வேயின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளது.

கன்சவேட்டிவ் கூட்டரசாங்கத்தின் பிரதம மந்திரி பிளோப்சமர்ப்பித்த சிக்கனக் கொள்கை தோல்வியடைந்ததைத் தொடர்ந்தே இந்த ஆட்சிமாற்றம் நிகழ்ந்துள்ளது.

எட்டுப் பிரிவுகளை உள்ளடக்கிய 18 பேர் கொண்ட புதிய அமைச்சரவையின் பெயர்ப்பட்டியலொன்று புதிய பிரதம மந்திரி பிரான்ட்லெண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சரவையில் ஐம்பது வீதத்திற்கு மேற்பட்டோர் பெண்களென்றும், நோர்வேயின் அரசியலில் இது ஒருபெரிய மாற்றமென்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை புதிய பிரதமர் பிரன்லென்ட் கடுமையான பொருளாதார நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தப்போவதாக எசசரிக்கை செய்துள்ளதுடன், எண்ணெய் விலைகள் வீழ்ச்சியடைந்து வருவதால் புதிய பொருளாதார விஸ்தரிப்புத் திட்டத்தைக்கைவிடப்போவதாகவும் தெரிவித்துள்ளார். [ரா)

## மட்டக்களப்பு அம்பாறையில்

# ஆயுதப்படை தேடுதலினுல் வேளாண்மை பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில ஆயுதப்படையினர் தொடர்ந்து மேற்கொண்டுவரும் தேடுதல்களினுல், காலம்பாக வேளாண்மைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பிரஜைகள்குழு விவசாய அமைச்சருக்கு தந்திஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

சமீபநாட்களாக வயல்வேலைகளில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் கைதுசெய்யப்பட்டிருந்ததும் உழவுஇயந்திரங்கள் கைப்பற்றப்பட்டிருந்ததும் குறித்து அத்தந்தியில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கல்குடாத் தொகுதியிலுள்ள புலிபாய்ந்தகல் என்னுமிடத்தில் வயல்வேலையில் ஈடுபட்டிருந்த விவசாயியான தங்கராசா என்பவர் ஆயுதப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சைககுட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் அத்தந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

ஆயுதப் படையினரால் விவசாயிகள் தாக்கப்படுதல் கைது செய்தல் போன்ற அராஜகச் செயல்களிலிருந்து காப்பாற்றுமாறும் பிரஜைகள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (மா)

## ''வரையறுக்கப்பட்ட சட்டங்களுக்கு அமையவே நாம் செயல்படுகிறோம்''

### வல்வை பிரஜைகள்குழு ஜனாதிபதிக்குக் கடிதம்

[வல்வெட்டித்துறை]

''அண்மையில் தேசிய பந்தோபஸ்து அமைச்சினுல் வல்வைப் பிரஜைகள் குழுமீது சுமத்தப்பட்ட உண்மைக்குப் புறம்பான அறிக்கை குறித்து குழு பெரும் குழப்பத்தில் ஆழ்த்தப்பட்டுள்ளது

அண்மையில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் பாதுகாப்புப் படையினரால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகள், கொலைகள், சேதங்கள் பற்றிய விபரங்கள், தகவல்கள், அறிக்கைகள் எவ்விதம் பெறப்பட்டன, பலதரப்பட்ட துன்பங்களால் ஏற்பட்ட நஷ்டங்களுக்கு எவ்வகையில் இக்குழு பரிகாரங்களைத் தேட முனைந்தது, எடுத்தது என்பனபற்றிய உண்மை விபரங்களை யாழ். அரசாங்க அதிபரும், பாதுகாப்பு இணைப்பதிகாரியும் நன்கறிந்தும் எமது குழுமீது உண்மைக்கு மாறாக தரிவுபடுத்தி அறிக்கை விடுத்திருந்தமை குழுவை இம்சிக்கும் ஒரு செயலாக அமைகிறது''

இவ்வாறு வல்வை பிரஜைகள்குழு பொய்யான தகவல்கள், பொய்யான பிரசாரங்கள் தருவதாகக் கருத்துப்பட தேசிய பந்தோபஸ்து அமைச்சினுல் 'தினகரனி'ல் வெளியிடப்பட்ட அறிக்கையைக் கண்டித்து இக்குழு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

இக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''எமது வல்வைப் பிரஜைகள்குழு வரையறுக்கப்பட்ட கடமைகள் சட்டதிட்டங்களுக்கமையவே செயல்பட்டு வந்திருக்கிறது. குறிக்கப்பட்ட எமது பிரதேசத்தில் அரச நிர்வாகம் துண்டிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் படையினரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அனர்த்தங்களுக்கும் அழிவுகளுக்கும் ஏற்றவாறு ஆவன செய்ய வேண்டும், தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஜனாதிபதியவர்களைக் கேட்டுக் கொண்டோமே யொழிய எமது வரையறை மீறிய செயல்களில் நாம் ஈடுபட்டதில்லை.

அரச தலைமைப்பீடங்களுடன் பொதுமக்கள் தொடர்பு வைத்துக் கொள்ள ஒரே சாதனமாக விளங்கும் பிரஜைகள் குழுக்கள்மீது உண்மைக்கு மாறாக திரித்துஅறிக்கைகள் விடுவதால் இத்தொடர்பும் துண்டிக்கப்பட ஏதுவாக அமையலாம் என்பதனைக் கருத்திற் கொண்டு இப்படியான உண்மைக்குப் புறம்பான அறிக்கைகளை பிரஜைகள் குழுக்கள்மீது பிரயோகிப்பதை அரசபீடங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பதனை ஜனாதிபதி அவர்களின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.''

## கொக்கு வேட்டையில் இராணுவம்

[வவனியா]

வவனியா ரயில் நிலைய வீதியில் தடைபோட்டு முகாமிட்டிருக்கும் ராணுவத்தினர் அண்மையில் உள்ள வயிரவப்புளியங்குளத்தை நோக்கி நேற்று முன்தினம் பிற்பகல் சரமாரியாகத் துப்பாக்கிவேட்டுக்களைத் தீர்த்தனர்.

துப்பாக்கிச் சூட்டுச்சத்தம் கேட்டதைத் தொடர்ந்து அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் பீதியடைந்து புகலிடம் நாடி ஓடினர்,

இறைச்சி உணவுக்காக வயிரவப்புளியங்குளத்தில் நின்ற கொக்குகளை வேட்டையாடுவதற்காகவே துப்பாக்கி வேட்டுக்களை இராணுவத்தினர் தீர்த்ததாகப் பின்னர் தெரிய வந்துள்ளதாம். [மா]

## அமெரிக்காவுக்கு எச்சரிக்கை

மாஸ்கோ மே-11

அங்கோலாவின் கிளர் சிப்படையினருக்கு உதவி அளிக்க வேண்டாமென சோவியத் யூனியனும், அங்கோலாவும் எச்சரிக்கை விடுத்துள்ளன

அங்கோலா அதிபரின் சோவியத் விஜய இறுதியில் இரு நாடுகளும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டன. அந்த அறிக்கையிலேயே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ரா)

## கண்ணதாசன் நினைவு மண்டபம்

சென்னை மே-11

தமிழக அமைச்சரவைக் கவிஞரான கவியரசு கண்ணதாசனுக்கு காரைக்குடியில் ஞாபகார்த்தமண்டபம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

நினைவு மண்டபம், நூல் நிலையம், பொது அரங்கம் என்ற அமைப்பில் அமையவிருக்கும் இந்த மண்டபத்திற்கு சுமார் 22 லட்சம் ரூபாவை தமிழக அரசு செலவிட்டுள்ளது. (ரா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி வாக்கு

விபசாரி கிழப்பருவமடைந்தபிறகுதான் பாவ மன்னிப்புக் கோருகிறாள். வேலையிலிருந்து நீக்கப்பட்ட பின்புதான் அதிகாரி மக்களைக் கொடுமைப்படுத்துவதை நிறுத்துகிறான்.

—சாஅதி.

# நமது நோக்கு

## ஏன் இந்த ஊர்காவல் படை?

நாட்டைப் பாதுகாக்கவென தரைப்படை, விமானப்படை, கடற்படை மற்றும் விசேஷ படைப் பிரிவுகளையெல்லாம் அமைத்து அவைகளைவடக்குக்கிழக்கு மாகாணங்களில் போர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி வருகின்றது அரசாங்கம். இவற்றுடன் பொலிஸ் படை, விசேஷ அதிரடிப்படைகள் வேறு!

இப்படைகள் பயன்படுத்துவதற்கென ஆயுதங்கள், வாகனங்கள் மற்றும் தளபாடங்கள் எல்லாம் ஏராளமாகவும் தாராளமாகவும் தருவிக்கப்பட்டுள்ளன. போதாக்குறைக்கு இஸ்ரேலிய 'மொஸாட், பிரிவும் பிரிட்டிஷ் தனியார் விமானப்படையினரும் ஆலோசனை வழங்கவென அழைக்கப்பட்டுள்ளார்கள. தமிழ்ப் பகுதிகளில் குண்டு வீசும் விமானங்களில் பாகிஸ்தான், இஸ்ரேலிய விமானிகள் செயல்படுவதாகவும் கூறப்படுகின்றது.

இத்தனைக்கும் மத்தியில் ஊர்காவல் படையென்று ஒன்றை அரசு ஏன் ஏற்படுத்தியிருக்கிறது என்று எமக்கு விளங்கவில்லை

தமிழ்ப்பகுதிகளில் இப்படையினர் நடத்தியுள்ள அட்டூழியங்கள் கணக்கிட முடியாது. வேலையில்லாத சிங்கள இளைஞர்களுக்கு ஒரு வேலை வாய்ப்பமைப்பாக இப்படை உருவாக்கப்பட்டுள்ளதா? அன்றில் குற்றச் செயல்களுக்குப் பேர்போனவர்களின் பொழுது போக்கமைப்பாக இது உருவாக்கப்பட்டுள்ளதாவென கேட்கத்தோன்றுகின்றது.

மட்டக்களப்பில், வவனியாவில். திருகோணமலையில் எல்லாம் இப்படையினர் செய்துள்ள அட்டூழியங்கள் சொல்லில் அடங்காதவை.

பல இடங்களில் இவர்களின் அத்துமீறிய செயல்கள் பகிரங்கமாகக் கண்டிக்கப்பட்டுள்ளன. பல முக்கிய பிரமுகர்கள் இப்படையினரின் செயல்முறைகளை ஆட்சேபித்துள்ளனர் சில கட்டங்களில் பொறுப்பற்ற வேலைகளில் ஈடுபட்டுபொலிசாரிடமே சிலர் அகப்பட்டுமுள்ளனர்.

மட்டக்களப்பில் பள்ளித் தலைமை ஆசிரியர் ஒருவர் பகிரங்கமாக அவமானப் படுத்தப்பட்டதையடுத்து திருகோணமலையில் பிரபலமான சட்டத்தரணி ஒருவர் ஊர்காவல்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாக தகவல்வந்துள்ளது. இவ்விடயங்கள் தற்பொழுது நீதிவிசாரணைக் குட்பட்டுள்ளமையால் நாம் அவைபற்றி விமர்சனம் செய்வது பொருத்தமல்ல.

ஆனல் ஊர்காவல் படையென்ற அமைப்பு அவசியமற்ற ஒன்று என்பதை மட்டும் மீண்டும் மீண்டும் வலியுறுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

ஊர்காவல் என்பது சொல்லுக்கும் செயலுக்கும் பொருத்தமாய் இருக்க வேண்டும். தமிழர், சிங்களவர், முஸ்லீம்கள் வாழும் பகுதிகளில் இந்த மூன்று இனத்தவர்களையும் சேர்ந்தவர்களில் பொறுப்பும் தகுதியும் உள்ள இளைஞர்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும் சிங்கள-தமிழ் விரோத மனப்பான்மை மோசமடைந்துள்ள வேளையில் தமிழ்ப் பகுதிகளில் பொறுப்பற்ற, பயிற்சியற்ற சிங்கள இளைஞர்களிடம் ஆயுதங்களைக் கொடுத்து ஊர்காவல் புரியும்படி விடுவதில் உள்ள ஆபத்தை அரசு உணராமல் இருப்பது கவலைக்குரியது.

இதேபோன்று சிங்கள கிராமங்களில் தமிழ் இளைஞர்களிடம் ஆயுதங்களை வழங்கி ஊர்காவலில் ஈடுபடும்படி அரசு கேட்டுக்கொள்ளுமானல் நிலைமை எப்படி இருக்கும்? சிங்களக் கட்சிகள், சிங்களத் தலைவர்கள், சிங்கள மக்கள் பௌத்த பிக்குமார் அனைவருமே ஒன்றுதிரண்டு போராட்டம் நடத்துவார்கள். அரசு திக்குமுக்காடிப் போகும்.

ஆனல் தமிழ்ப்பகுதிகளில் மட்டும் ஏன் இந்த நிலைமை? அரசும் அதிகாரிகளும் இது பற்றி சற்று ஆழமாகச் சிந்திக்கவேண்டிய கட்டம் உருவாகியுள்ளது.

சமூகங்களில் நேர்மையாக, மதிப்போடும் செல்வாக்கோடும் வாழும் பிரமுகர்கள் அடிக்கடி ஊர்காவல் படைகளின் அடாவடித்தனங்களுக்குள்ளாகி வருகிறார்கள். ஆயுதம் இருப்பதால் தாம் நினைத்ததைச் செய்துவிட்டு தப்பிவிடக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கிருக்கிறது. இதனுல் தமிழ்க் கிராமங்களில் மக்கள் எந்நேரமும் அச்சத்தோடு வாழவேண்டியுள்ளது.

கிராமங்களில் மக்கள் மத்தியில் அவ்வப்போது ஏற்படும் அசாதாரண நிலைமைகளின்போது பீதியைப் போக்கி அமைதியை நிலைநாட்டவும் அத்தியாவசியப் பொருட்கள், சுகாதார சேவைகள் போன்றவை சீராகச் செயல்படுவதற்கு உதவும் வகையிலும் ஊர்காவல்படைகள் பணியாற்றமுடியும். அவ்வாருன பணிகளில் இவர்கள் ஈடுபடுவதாயின் இப்படையினரால் நாட்டுக்குப் பெரும் சேவையாற்றமுடியும்.

அவ்வாருன அமைப்புக்கள் அவ்வக் கிராம மக்களிலிருந்து அம்மக்களின் விருப்பத்துடனேயே அமைக்கப்படுவதாய் இருத்தல்வேண்டும்.

இல்லையெனில் இந்த ஊர்காவல் படையினரால் நாட்டுக்கோ, அரசுக்கோ, மக்களுக்கோ எதுவித பயனும் ஏற்படப்போவதில்லை.

# 'மக்கள் முடிவை வைத்தே நாங்கள் செயல்படலாம்"

## 'துக்ளக்' பேட்டியில் சந்திரகாசன்

"திரு. அமிர்தலிங்கம் போன்றவர்கள், இடைக்காலத் தீர்வை ஏற்றுக்கொண்டு அதனை முதற்படியாகவைத்து முன்னே செல்லலாம் என்ற எண்ணம் கொண்டவர்கள். என்னைப் பொறுத்தளவிலே மக்கள் எடுத்த 77ம் ஆண்டு முடிவை வைத்துத்தான் நாங்கள் செயற்படலாம். அதற்கு அப்பாற்பட்டு செயற்படமுடியாது. எனவே அதற்குக் குறைந்த தீர்வை நாங்கள் ஏற்கக்கூடாதென்று நினைக்கின்றேன்''.

'துக்ளக்' பத்திரிகை ஆசிரியர் சோவுக்கு திரு சி. சந்திரகாசன் அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திரு' சி. சந்திரகாசன் தொடர்ந்து கூறியதாவது:

''தமிழர் விடுதலைக் கூட்டணியிலே நான் 1978 ஆம் ஆண்டு சட்டத்துறைச் செயலாளராக நியமிக்கப்பட்டு அதாவது திருவாளர் அமிர்தலிங்கம் பொதுச் செயலாளராகவும், அவருக்குக்கீழே இருந்த ஐந்துசெயலாளர்களில் நானெருவராக நியமிக்கப்பட்டிருந்தேன். அந்தக் காலகட்டத்திலே விடுதலைப் போராளிகளுக்கு நாங்கள் சட்டரீதியான உதவி அளிக்கின்ற விசயத்திலும், ஈழம் என்ற கோட்பாட்டை நாங்கள் விட்டுக்கொடுத்து, அதற்குக்குறைந்த ஒரு தீர்வை எடுப்பது சரியா, தவரு என்ற அந்த இரண்டு அணுகுமுறைகளிலும் தான் எனக்கும் அவர்களுக்கும் வேறுபாடு வந்தது. ஈழம் என்ற முடிவு மக்களால் எடுக்கப்பட்டமுடிவு. ஜெயவர்த்தன அரசாங்கம் வந்தபின்னர் இந்தப் பிரச்னையை ஈழத்துக்குக் குறைந்து ஓர் தீர்வைக் கொண்டுவந்து தீர்ப்பதற்கு அவர்களுக்கு ஒரு அவகாசம் கொடுக்கப்பட்டது. ஆரம்ப கட்டத்திலே நான் அதனை ஆதரித்தேன். காலக்கிரமத்திலே, அவர் உண்மையிலே ஓர் தீர்வை விரும்பவில்லை என்று கண்ட காலத்திலிருந்து நான் அதனை எதிர்த்தேன்.''

சோ: அப்படிப்பார்த்தால் நீங்கள் ஒரு சமஷ்டி அமைப்புக்கு......

சந்திரகாசன்: இல்லை. இதனை நாங்கள் ஏற்கமுடியாது என்பது என்னுடைய கணிப்பு. இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று அது நடைமுறைசாத்தியமற்றது என்ற நிலைக்கு நாங்கள் வந்துவிட்டோம் இரண்டாவது மக்கள் ஒருமித்து வாழவேண்டுமென்ற சிந்தனை இருந்தால் மட்டுமே ஒரு சமஷ்டி அரசு நிலைத்து நிற்கும். ஒருபகுதி மக்களை அழித்துவிட வேண்டுமென்று சிங்களமக்கள் நினைக்கும் பின்னணியிலே, சமஷ்டி என்பது செயற்படாதென்பது என்னுடைய கணிப்பு. எனவே தான் சமஷ்டியைக்கூட நாங்கள் ஏற்கக்கூடிய நிலை இப்போது இல்லை. அந்தக்காலம் கடந்துவிட்டது.

சோ: ஒருசமஷ்டி அமைப்பு வந்தால் கூட அரசு மற்றும் அரசியல்வாதிகளல்லாத சிங்கள மக்கள் தமிழ் மக்களை அமைதியாக வாழவிடமாட்டார்கள், விரோத மனப்பான்மையில் இருப்பார்கள் என்று நினைக்கிறீர்களா?

சந்திரகாசன்: அப்படித்தான் நான் நினைக்கிறேன். அந்த அளவுக்கு நிலைமை சீர்கெட்டுவிட்டது என்பது என்னுடைய கணிப்பு. பத்துப் பதினைந்தாண்டுகளுக்கு முன்னர் அந்த முயற்சி எடுக்கப்பட்டிருந்தால் அது சித்தியடைந்திருக்கலாம். இனி அது சித்தியடையக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை என்று நான் நினைக்கிறேன்.

சோ: இந்தப்பிரச்னை தீர்வதற்கு இந்தியா இப்பொழுது கடைப்பிடித்துவரும் அணுகுமுறை சரியானதா? அல்லது இந்தியா என்ன செய்யவேண்டுமென்று நினைக்கிறீர்கள்?

சந்திரகாசன்: கடைசியாக இந்தியஅரசினுடைய முடிவை ராஜீவ் காந்தி அவர்கள் வெளியிட்ட நிலைப்பாட்டை வைத்துக்கொண்டு சொல்கிறேன். அதாவது, அப்பாவி மக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படும் வரைக்கும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியாதென்று அவர்சொன்ன அந்த நிலைப்பாட்டை நாங்கள் வரவேற்கின்ருேம். அது ஒரு சரியான முடிவு என்பதை நாம் ஏற்கிருேம். இரண்டாவது, இந்திய அரசு இலங்கை ஒரு நாடாக இருக்கவேண்டுமென்ற நிலைப்பாட்டை வெளிப்படையாகச் சொல்லவேண்டும். அதற்கப்பாற்பட்ட ஒரு முடிவைச் சொல்வதில்இந்திய அரசிற்குச் சில கட்டுப்பாடுகள் இருக்கலாம். ஆனபடியால் அதைப்பற்றி நாங்கள் எங்கள் கருத்துவேறுபாட்டை அவர்களிடம் வெளிப்படுத்துவதில்லை.

சென்ற பாராளுமன்றத் தொடரிலே திரு. பகத் அவர்கள் மனித உரிமைகள் குழுக் கூட்டத்திலும், மற்ற இடங்களிலும் இந்தப் பிரச்னையை எழுப்புவதாக ஒரு வாக்குறுதி கொடுத்திருக்கிறார் 1984,85ல் நடந்த மனித உரிமைகள் குழுக்கூட்டங்களிலே நான் பிரசன்னமாயிருந்து இந்திய அரசினுடைய அணுகுமுறை 'எங்களுக்குச் சாதகமாக இந்தப்பிரச்னையை வெளிப்படுத்த வேண்டுமென்று எத்தனையோ முயற்சிகளெடுத்தும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை இம்முறை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. இதனுடைய தொடர்பாக இந்தப்பிரச்னையை, ஆளும் கட்சி மாத்திரமல்லாமல் அனைத்து எதிர்க்கட்சிகளின் உடந்தையுடன் பல்வேறு அரசியல் தலைவர்களை வெளிநாடுகளுக்கனுப்பி இலங்கையிலே நடக்கின்ற இனக்கொலை நிறுத்தப்படவேண்டுமென்கின்ற பிரசாரத்தை நடத்த இந்திய அரசு முன்வரவேண்டுமென்பது என்னுடைய அவா. அப்படி அந்த முயற்சி நடந்தால் உலகத்திலேயிருக்கின்ற பல்வேறு நாடுகள் இலங்கையிலே இருக்கிற பிரச்னையை, தற்போது எடுக்கிற தணிக்கையுடன் கூடிய அவதானத்துடன் கணிக்கத் தொடங்கும். 'அப்படி எடுக்கும் முயற்சிகள்' மூலமாக இனப்படுகொலையை நிறுத்த முடியாவிட்டால், இந்திய அரசு தனது படைகளை அனுப்பி, அந்த இனப் படுகொலையை நிறுத்துவேண்டும். அப்படி நிறுத்துகின்ற நேரத்தில் ஏற்படுகின்ற ராணுவ நிலையிலே, ஈழம் பிரியக்கூடிய ஒரு சாத்தியக்கூறு ஏற்படும். ஆனுல், நாட்டைப் பிளந்தது என்ற குற்றச் சாட்டு வரும் என்று. இந்திய அரசு நினைத்தால் ஒரு பொதுவான நிறுவனமான ஐக்கிய நாடுகள் சபையை, சர்வ ஜனவாக்கெடுப்பை நடத்த அழைப்பதும் நியாயமானது. அதனையும் நாம் விரும்புகிறேம்.

அரசியல் பிரச்னையைத்தீர்ப்பதற்காக ராணுவத்தை நாங்கள் கேட்கவில்லை ஈழத்தை அமைப்பதற்காக நாங்கள் ராணுவத்தைக் கேட்கவில்லை. இனக் கொலை நிறுத்தப்பட்டுவிட்டால் சாத்வீக ரீதியான போராட்டம், அரசியல் ரீதியான போராட்டம் தொடர்ந்துகொண்டு போகும். நாங்கள் அந்த வழியிலே எங்களுடைய பிரச்னைகளைத் தீர்க்க முடியும்.

சோ; இந்திய ராணுவத் தலையீடு அமைதி காக்வோ, அல்லது வேறு காரணத்திற்காகவோ வேண்டும் என்பதை ஆயுதம் தாங்கிய இயக்கத்தினர் பலரும் விரும்பவில்லை. தங்களுக்கு இந்தியா இங்கு ஆயுத சப்ளை செய்ய வேண்டும், பயிற்சி கொடுக்க வேண்டும் தாங்கள் அங்கு சென்று போராடி ஈழம் அமைக்க வேண்டும் என்று தான்விரும்புகிறார்களே ஒழிய, இந்திய ராணுவம் அங்கு வருவதை அவர்கள் விரும்பவில்லை. இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

சந்திரஹாஸன்: போராளிகளைப் பொறுத்த அளவிலே அவர்கள் ஆயுதம் காவிப் போராட்டம் நடத்துகிறவர்கள். தாங்கள் ஆயுதம் காவிய போராட்டத்திலே வெற்றி பெறலாம் என்ற நம்பிக்கையுடன் அந்தப் போராட்டத்திலே இறங்கி இருக்கிருர்கள். அப்படிப்பட்ட நம்பிக்கை அவர்களுக்கு இருந்ததால்தான் அவர்களும்தங்கள் போராட்டத்தை முடிவு வரைக்கும் எடுத்துச் செல்லலாம் எனவே அவர்களது நிலைப்பாட்டை அந்த விதத்திலேயே நாங்கள் அணுகுகிருேம். அதே நேரம் ஈழ மக்களை நீங்கள் எடுத்துக் கொண்டீர்களானல் 99 சதவிகிதமக்கள் இந்திய ராணுவத் தலையீட்டினுல் இனக்கொலை நிறுத்தப்படும் என்று நம்புபவர்கள் மாத்திரம் அல்ல,அதனை நாள் தோறும் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிருர்கள். எனவே மக்களைப் பொறுத்த அளவிலும் ஆயுதம் காவாத விதத்தில் பங்களிக்கின்ற எங்களைப் போன்றவர்களும் இந்தியாவினுடைய ராணுவத் தலையீடு நிச்சயமாக வேண்டும். அப்பொழுது தான் இந்த இனப் படுகொலையை நிறுத்தலாம் என்று விரும்புகின்றேம்.

சோ: தனி ஈழ நாடு என்பதைப் பற்றிப் பேசினீர்கள். தனி ஈழ நாடு அமைந்தால், சில பிரச்னைகள் இருக்கின்றன என்று நான் நினைக்கிறேன் - ஒரு புறம் 'இந்தியத் தமிழர்கள்' என்று அழைக்கப்படும் மலைப் பிரதேசத்தில் உள்ளவர்களும், கொழும்பு மற்ற இடங்களில் உள்ளவர்களும், தோட்டத் தொழிலாளர்களாக உள்ளவர்களுக்கும் மற்ருெரு புறம் ஈழத்தமிழர்களுக்கும்இடையே என்றுமே பெரிய கருத்து வேறுபாடுகள் இருந்திருக்கின்றன. அவர்களில் பலர் இப்பொழுதும் கூட என்னிடமும் சரி சில பத்திரிகைகளிலும் சரி இது பற்றிச்சொல்லி இருக்கிருாகள். என்னிடம்குறிப்பாகச் சொல்லி இருக்கிருர்கள். நான் இலங்கையிலும் பலரிடமும் இதைப்பற்றி நேரிலும் பேசியிருக்கிறேன்.

அவர்களின் கருத்து என்னவென்ருல், 'யாழ்ப்பாணத் தமிழர்கள் எங்களை அடக்கி ஆளத் தான் விரும்புவார்களேயொழிய சம உரிமை தரமாட்டார்கள். எங்களை ஒருகீழ்ஜாதியாகவே கருதுகிருர்கள் இலங்கையில் சில இலங்கை அதிகாரிகளிடம்கூட எங்களுக்குச் சில சலுகைகள் கிடைத்து விடும். காரியங்கள் நடந்து விடும். ஆனல் யாழ்ப்பாணத் தமிழர்கள் அதிகாரிகளாக இருக்கும் இடங்களில் எங்களை வேண்டுமென்றே ஒதுக்குவார்கள். எங்களுக்கு எந்த நியாயமும்கிடைக்க வழி செய்யமாட்டார்கள். இதுதான் எங்களுடைய அனுபவம். நாங்கள் சிங்களவரிடம்

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் முடிவை .....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சாவது கூட மேல். யாழ்ப்பாணத் தமிழர்களிடம் வந்தால் அடிமைகளாகத்தான் வாழ வேண்டியிருக்கும். கீழ் ஜாதியினராகத் தான் வாழ வேண்டி இருக்கும் இப்படிப் பட்ட கருத்து அந்த மாதிரிப் பலரிடையே இருக்கிறது.

ஒரு வேளை இப்படி இருக்கலாம். அவர்கள் தங்கள் வியாபார நேரத்தில் சிங்களப் பகுதிகளில் வியாபாரம் செய்வது கெட்டுவிடும். அதனால் ஈட்டுகிற பணம் பறி போய் விடும்' என்ற நினைப்பில் அவர்கள் சொல்லலாம். மற்ற பலருக்கு உண்மையாகவே இந்த மன வருத்தங்கள் இருக்கலாம். ஆக ஒரு பெரிய வித்தியாசம் இந்த 2 விதமான தமிழர்களிடையே இருக்கிறது அவர்கள் நிலை என்னவாகும்? சிங்களப் பகுதிகளில் அவர்கள் வாழும் போது சிங்கள மக்கள் என்ன சொல்வார்கள்? 'உங்களுக்குத் தனித் தமிழ் நாடு கிடைத்து விட்டது, அங்கே போங்கள்' என்று விரட்டுவார்கள். ஆனல் இங்கே வந்தால் தங்களுக்குச் சம உரிமைகிடைக்காது என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். இந்த வித்தியாசங்கள் இருக்கின்றன. இன்னமும் தொடர்கின்றன. இது ஒரு பிரச்னை.

இரண்டாவது பிரச்னை ஈழத்திலேயே என்ன நடக்கும்? ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள்—விடுதலைப் புலிகள் என்று பொதுவாக நாங்கள் அழைக்கிறோம். அவர்கள் எந்த மாதிரி அரசை அங்கே நிறுவுவார்கள்? இப்பொழுது ஜனநாயகம், மனித உரிமை என்றெல்லாம் பேசுபவர்கள். அதை அங்கே நிலை நாட்டப்போகிறார்களா? அல்லது மக்கள் அங்கே ஒரு இராணுவ ஆட்சியின்கீழ் வாழ்வார்களா? ஒரு பாஸிச அரசின்கீழ் வாழ்வார்களா அல்லது ஜனநாயக அரசின்கீழ் வாழ்வார்களா? அமிர்தலிங்கம் போன்ற மிதவாதிகளின் நிலைமைஎன்னவாகும்? அங்கே விடுதலைப் போராட்ட இயக்கங்களுக்குள்ளேயே, இப்பொழுது இருக்கும் போட்டி பகைமை நமக்கெல்லாம் தெரியும். அங்கே அரசு அமைப்பது எப்படி ஒரு அமைதியான முறையில் நடக்கும்? துப்பாக்கி மூலம்தான் அங்கே அரசாங்கங்கள் மாறும் என்ற நிலைமை உருவாகி விடாதா?

இந்த இரண்டு பிரச்னைகள் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

சந்திரஹாசன்: முதலாவதாக நீங்கள் எடுத்த பிரச்னை 'மலையகத்து மக்கள் என்று சொல்லப்படுகின்ற மலையகத்துத் தமிழர்களுடையபிரச்னை. அதைப் பொறுத்த அளவிலே ஈழத்தமிழர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டால் அதில் இத்தனை சதவீதம் மலையகத்துத் தமிழர்கள் இருப்பார்கள் என்பதையும் தெளிவுபடுத்தினல் ஓரளவுக்குப் பதில் வரும். எங்களது கணிப்பின் படிக்கு 1948-ம் ஆண்டு, பிப்ரவரி 4-ம் தேதி இலங்கை சுதந்திரம் பெற்ற அந்தநாளில் இலங்கையைத் தாயகமாகக் கொண்டு வாழ்ந்த அத்தனை தமிழர்களும் ஈழத்துக்குடிமக்களாவார்கள். இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து வந்தவர்கள் கூட மீண்டும் இலங்கைக்குத் திருப்பிவந்து ஈழத்துமக்களாக மீண்டும் குடியுரிமை பெறும் உரிமை இருக்கிறது.

## சிறுவர் சிகிச்சை நிலையம்

[பண்டத்தரிப்பு]

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் 12 படுக்கைகளைக் கொண்ட சிறுவர் சிகிச்சை நிலையமொன்று நிறுவப்படவுள்ளது. இதற்கானநிதி இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது.

## குரு

(வேலணையூர் பரம்பரை ஆதனம் ஸ்ரீலஸ்ரீ செ. கைலாசநாத தேசிகர் நேற்று ஞாயிறு குருபட்டாபிஷேகம் தரித்தார்.)

முதலில் நாம் குருவை மதிக்க பழக வேண்டும். அவர் சொல்லும் வார்த்தைகளைத் தட்டாது மன நிறைவுடன் செய்ய வேண்டும் இதைத் தான் நமது மதம், 'குருவே பிரம்மா, குருவே விஷ்ணு; குருவே தேவர், குருவே பரமேஸ்வரர் என்கிறது நம்வாழ்க்கையில் எல்லா வகையிலும் குருவையே தனிப் பெரும் பொருளாகக் கொள்ள வேண்டிய வழியை நமது மதம் தேடித் தந்திருக்கிறது.

எமது கண்கண்ட தெய்வங்கள் அன்னையும், பிதாவுமாக இருந்தாலும் எமக்கு எழுத்தறிவித்தவன் குருவாகும். தொழிற் துறைக் கல்வியை நாடிப் போனலும் அதனைப் பயிற்றுவித்து வாழ வழி காட்டுபவரும் குருவே குடும்ப வாழ்க்கையை ஆசீர்வதித்து வைப்பவரும் குருவே. மரணப் படுக்கையில் இருக்கும் போதும், மரணித்த பின்பும் வேதங்கள் ஓதி நம்மை மரணமிலாப் பெருவாழ்வு அடையச் செய்பவரும் குருவே.

மாணிக்கவாசக சுவாமிகள் தமது 16 வயதிலேயேஅரிமர்த்தன பாண்டிய மன்னனுக்கு முதன் மந்திரியாக இருந்தார். ஒரு நாள் பாண்டியமன்னனின் கட்டளைப்படி குதிரைகள் வாங்கச் செல்லுகையில் திருப்பெருந்துறையில் குருந்த மர நிழலிலே அடியார்கள் புடைசூழச் சிரசிலும், கழுதிலும் மார்பிலும், கரங்களிலும் உருத்திராக்கம் தரித்துக் கொண்டு நெற்றியில் விபூதி விளங்க சிவபெருமான் குருவடிவில் வீற்றிருந்தார். அருட் குரவரைக் கண்ட மணிவாசகர் ஓடோடிச் சென்று வீழ்ந்து வணங்கினர். சிவபெருமான் தன் திருவடி மலரை அவர் சென்னி மீது சூட்டி மாணிக்கவாசகர் செவிகளிலே ஸ்ரீபஞ்சாட்சரத்தை உபதேசித்துகடவுள், உயிர், உலகம் எனும் முப்பொருள் உண்மையை விளக்கியருளினர் இதனல் குருதத்துவத்தின் மகிமையையும் இங்கே உணர வைத்தார்.

குழந்தையான முருகன் தந்தையின் செவிகளில் பிரணவ மந்திரத்தை உபதேசிக்கையில் சிவபெருமான் குழந்தை முருகனைக் குருவாகப்போற்றி உபதேசம் பெற்ற புராண வரலாற்றையும் நாம் இங்கு நோக்குவோமாக.

இராமபிரான்மீது ஆஞ்சநேயர் வைத்திருந்த அன்பும் பணிவும் குருபக்தியின் ஒரு எடுத்துக்காட்டேயாகும்.

எனவே ''விழிக்குத் துணை அவன் திருமென்மலர்ப்பாதங்கள்'' என உணர்ந்து இறையருளைப்பெறக் குருவருளை வேண்டி நிற்போமாக.

எஸ்.ஐ.தனபாலசிங்கம்.

## வருடாந்த மஹோற்சவம்

[பண்டத்தரிப்பு]

சுழிபுரம் பறளாய் அருள்மிகு சிவசுப்பிரமணியர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று இம்மாதம் 22ம் திகதி வியாழக்கிழமையன்று தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன.

## மக்கி மண்ணினல் பாடசாலை பாதிப்பு

(சாவகச்சேரி)

கைதடி-கோப்பாய் வீதியில் போடப்பட்டுள்ள வெள்ளை மக்கிமண் காற்றினல் அள்ளப்பட்டு வீதிக்கருகில் உள்ள கலைவாணி வித்தியாசாலைக்கட்டடத்தில் பெருமளவில் தேங்கியிருப்பதன் காரணமாக அங்கு ஆசிரியர்களுக்குப் பெரும் தொல்லையும் சுகாதாரக்குறைவும் ஏற்பட்டு வருகின்றது.

இதன் காரணமாக வித்தியாலய அதிபர், வகுப்புக்களை வீதிக்கருகில் இருக்கும் கட்டிடத்தில் நடாத்தமுடியாமல் அவதிப்படுவதாகத் தெரிய வருகின்றது.

பாடசாலை நேரத்தில் மண் பெருவாரியாகப் பாடசாலைக் கட்டிடத்தினை ஆக்கிரமிப்புச் செய்வதால் பெண் ஆசிரியைகள் கடமைநேரத்தில் தலைக்கு முக்காடு போட்டுக் கொண்டே கடமைபுரியவேண்டியுள்ளதாம்.

## சந்தைக்கு நிதி ஒதுக்கீடு

(சித்தன்கேணி)

சங்கானை பொதுச் சந்தை மீன சந்தை திருத்தியமைக்கப் படவுள்ளது. இதற்காக பன்முகபடுத்தப்பட்ட வரவு செலவுதிட்டத்தின்கீழ் இந்த ஆண்டு முப்பதினயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.


## முதலாவது பிறந்ததின வாழ்த்து



செல்வி பிரியங்கா

ஜேர்மனியிலுள்ள பிராங்பேர்ட்டில் வசிக்கும் ராம்பிரசாத் - மதனகாம்பிகை தம்பதிகளின் செல்வப் புதல்வி செல்வி பிரியங்கா (12-5-86) இன்று தனது முதலாவது பிறந்தநாளை ஜேர்மனியில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, சித்தப்பா, அங்கிள், தாத்தா குடும்பத்தினரும், தாத்தா, அம்மம்மா, கொழும்பு P M. மாமா, ஜேர்மனி ஜெயம்மாமா, சனடா குமார் மாமா, சிவம் மாமா, ஜேர்மனி ராசன் மாமா, ஜேமனி ரவி மாமா, ஆனைக்கோட்டை கன ராசா தாத்தா குடும்பத்தினரும். நயினதீவு பரம் தாத்தா குடும்பத்தினரும், மாமிமாசளும், மச்சான் ஜெனனும் மற்றும் உறவினர்சளும், சகல கலைகளும் கற்றுசீரோடும், சிறப்போடும் நயினை நாகபூசணி அம்பாளின் அருளாடு பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றார்சள்.

C 2175



இப்பொழுது தாராளமாகக் கிடைக்கிறது

LANKA CEMENT

லங்கா சீமெண்ட்




விலை ரூபா 96/- மாத்திரமே.
(50 கி.கி/ தொழிற்சாலையிலிருந்து)
1978ன் B.S.S.12 தரத்திற்கமைந்தது.

உரமும் உறுதியும் நாடுவோர் தேடி வாங்குவது - லங்கா சிமெண்ட்

லங்கா சீமெந்து லிமிட்டெட்

கீரிமலை வீதி, காங்கேசன்துறை

Phoenix



## எமது புதிய ஒரிஜினல் வெளியீடுகள்

1. பந்தயம் (V. G. P. ORIGINAL)
2. கோயில்யானை (V. G. P. ORIGINAL)
3. நானே ராஜா நானே மந்திரி (V. G P. ORIGINAL)
4. சாதனை (PYRAMID ORIGINAL)
5. ராஜகோபுரம் (PYRAMID ORIGINAL)
6. ஜான்சி ராணி (SUGAN ORIGINAL)
7. நிலவே மலரே (PYRAMID MASTER)
8. ஒரு மனிதன் ஒரு மனைவி (PYRAMID MASTER)
9. யாரோ எழுதிய கவிதை (CAMERA COPY)
10. நானும் ஒரு தொழிலாளி (CAMERA COPY)

குணம் வீடியோ சென்ரர்,
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665 (C 2279)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கல்லூரியின் முன்னேற்றம் சமூகத்திலேயே தங்கியுள்ளது'

(யாழ்ப்பாணம்)

''யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மாணவர்களின் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் முன்வைத்து வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் செல்வதைக் காணும்போது நான் மிகவும் சந்தோஷமடைகின்றேன்.''

இவ்வாறு யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டிக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''ஒரு கல்லூரியின் வளர்ச்சி அக்கல்லூரி அமைந்துள்ள சமூகத்திலேயே முக்கியமாகத் தங்கியுள்ளது, யாழ். முஸ்லிம்கள் கல்வியின் வளர்ச்சிக்கு முன்னின்று உழைக்க வேண்டும். கல்வித்திணைக்களத்தைப் பொறுத்தமட்டில் தன்னாலான இயன்ற உதவிகளை திணைக்களம் இக்கல்லூரியின் வளர்சிக்குசெய்து தரும்'' எனவும்கூறினார்.

கல்லூரியின் அதிபர் ஜனாப் ஏ. எச் ஹமீம் பேசுகையில், ''உயர்ந்த உள்ளம் படைத்த ஒருவர் வடமாநிலத்துக்கு கல்விப்பணிப்பாளராகக் கிடைத்திருப்பது ஒரு வரப்பிரசாதமாகும் என்றார்.''

யாழ். வட்டாரக் கல்வி அதிகாரி ஆர். சிவானந்தன், கல்லூரியின் கொடியை ஏற்றி விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்தும் வைத்தார்.

வெற்றி வீரர்களுக்கு திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்கினார்.

13 வயதுக்குட்பட்ட பிரிவில் எம். எம். ஐனேசனும், 15 வயதுக்குட்பட்டோர் பிரிவில் எஸ். ஏ. ஸி. எம். ஜாயிஸ்ஸும், 17 வயதுக்குட்பட்டோர் பிரிவில் ஏ. எஸ். எம். நிஸாரும் சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

154 புள்ளிகளைப் பெற்ற அலி இல்லம் முதலாவது இடத்தையும்; 128 புள்ளிகளைப் பெற்ற இக்பால் இல்லம் 2வது இடத்தையும்; 75 புள்ளிகளைப் பெற்ற சாபி இல்லம் 3வது இடத்தையும் பெற்றன. [வி]

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

(இருபிட்டி)

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் கடந்த வாரம் வித்தியாலய அதிபர் திரு த. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: திரு க. சண்முகலிங்கம் (அதிபர்), செயலாளர்: திரு. ப. கணேசலிங்கம், பொருளாளர் திருமதி அ. சிதம்பரநாதன். உறுப்பினர்கள் ஐவர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## விளையாட்டு விழா

[இருபிட்டி நிருபர்]

புங்குடுதீவு பெருங்காடு தமிழ்த்தாய் மன்றத்தின் ஐந்தாவது ஆண்டு விளையாட்டு விழா சென்ற மாதம் புங்குடுதீவு கிழக்கு, மத்தி விசேட சேவை அலுவலர் சோ. சச்சிதானந்தம் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக புங்குடுதீவு வைத்திய அதிகாரி ஆ. இளையதம்பி அவர்கள் கலந்து கொண்டார். இறுதியாக விளையாட்டுகளில் வெற்றி பெற்றோருக்கு டாக்டர் ஜி கோபாலகிருஷ்ணன் பரிசில்களை வழங்கினார்.

## சுற்றுப்போட்டி

[சாவகச்சேரி]

கைதடி வளர்மதி சன சமூக நிலையத்தின் 27 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நிலையத்தின் விளையாட்டுப் பகுதி தென்மராட்சி ரீதியிலான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியினை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் நிலையத்தினருடன் தொடர்பு கொள்ளலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

மாதம்: சித்திரை
திகதி: 29 [12-5-86]
கிழமை: திங்கள்
திதி: திருதியை
காலை 9 37ன் மேல்சதுர்த்தி
நட்சத்திரம்: மிருகசீரிடம்
பி. ப.வரை

மேடம்: குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குறுக்கு வழித் தலையீடு தவிர்க்கப்பட வேண்டும். லாபம் சுகமும் உண்டு.

இடபம்: அன்னியர்கள் சகவாசம் சங்கடத்தில் மாட்டி வைக்கும். அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் விளையலாம். தொழிலும தடையுண்டு.

மிதுனம்: மனப்போராட்டம் அதிகரிக்கும் வாய்க்கோளாறுக்கும் இடமுண்டு உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும்.

கடகம்: சினேகிதர்மூலம் சிந்தையில் குழப்பம் தோன்றும். பேச்சில் நிதானம் பெருமை தரும். எதிர்பார்த்த வரவும் உண்டு.

சிங்கம்: முயற்சியில் முட்டுக்கட்டை தோன்றும் தொழிலிலும் முன்னேற்றம் குன்றும். சகோதர வழியாலும் சஞ்சலமுண்டு.

கன்னி; இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு இன்று அவதானம் வேண்டும் ... சுகக்குறைவும் உண்டு.

துலாம்: இதயப்படுதாவில் இன்பத்தின் மின்னல். புக்கிர வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். மேலதிகாரிகளின் உதவியும் உண்டு.

விருச்சிகம்: தொல்லைகள் தலைதூக்கும் தொழில் புரியும் இடத்தில் ஏமாற்றத்திற்கு இடமுண்டு முன்னெச்சரிகை நன்று.

தனுசு: களஸ்திரவழியால் சுகமுண்டு கடமையில் சிறப்புண்டு கொடுக்கல் வாங்கலில் அவதானம் வேண்டும்.

மகரம்: குடும்பத்தில் சிறு பூசல்கள் தலைதூக்கும் எப முறையோர்களாயினும் நம்பி நடக்கக் கூடாவாம். இன்று அமைதி நன்று.

கும்பம்: புகழ்தரும் விடயங்களில் ஈடுபடுவீர்கள். புண்ணிய கருமங்களுல் விருப்பு மேலிடும். குருவருளும் உண்டு.

மீனம்: தொழில்மூலம் சிறப்புண்டு. வணிகர்களுக்கு வரவில் மந்தம் காணும திடீர் பயணத்திற்கும் இடமேற்படலாம்.


## பம்பாய் வெங்காய விதை விற்பனைக்கு

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விளைதிறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. தரத்திற்கு உத்தரவாதம் கையிருப்பு சொற்பமே.

ஸ்ரீமகள் ரேடர்ஸ்,
158, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி 23572
(C- 2276)



## பிரயாண ஒழுங்கு டென்மார்க்

எமது முகவர்
இம்மாதம் 15-ந் திகதி
குறைந்த செலவில்
டென்மார்க் அழைத்துச் செல்வார்.
அத்துடன்
சவுதி அரேபியா, மலேசியா, கிளினேஸ்க்கு
உடன் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
மற்றும
பாஸ்போட், விசா, BOND, ரிக்கற்
முதலியன உடனுக் டன் செய்துகொடுக்கப்படும்.

UNIVERSAL AGENCIES
யூனிவேசல் ஏஜென்சி
(பெற்றோலியம் கூட்டுத்தாபனம் முன்பாக)
125 (455), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C-2257)



## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர்
18-ந் திகதி உங்களை குறைந்த செலவில் அழைத்துச்செல்வார்.

உடனடியாக பாஸ்போட்
உடன் தொடர்பு கொள்ளவும்.

★ சவூதியில் கிளினர் ஆண், பெண் இருபாலாருக்கும் வருமான ஒழுங்கும்
★ குவைத்தில் ஆண், பெண் இருபாலாருக்கும் வருமான ஒழுங்கும்
★ மாலைதீவிலும் வருமான ஒழுங்கு உடனடியாக செய்து தரப்படும்.

பாஸ்போட், BOND, ரிக்கற்
முதலியனவும் துரித கெதியில் செய்து தரப்படும்.

GROUP ATLANTIC
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக)
(A 491)


சுகாதாரசேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

## கிளிநொச்சி அரசாங்க வைத்தியசாலை கட்டிடவேலை

1986ம் ஆண்டு மே மாதம் 27ம் திகதி காலை 10-00மணி வரை சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் அவர்களால் கீழே குறிப்பிட்ட கட்டிடவேலைக்கு ரூப 50 000/-க்கு மேற்பட்ட தொகைக்கு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல்வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றையதினம் காலை 10-30மணியளவில் கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் ஒப்பந்தகாரரோ அல்லது அவரது பிரதிநிதிகளோ சமுகம் அளிக்கலாம்.

இவ்வேலை செய்யவிரும்புவோர் எவரும் அரசகரும வேலை ஒப்பந்தகாரராகவோ அல்லது உள்ளூராட்சி உதவி ஆணையாளரினல் அல்லது கூட்டுறவு உதவி ஆணையாளரினல் அங்கீகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இவ்வேலை செய்வதற்கு விரும்புவோர் 1986ம் ஆண்டு மே மாதம் 26ம் திகதி நண்பகல் 12-00மணிவரை சுகாதாரசேவைகள் பிராந்திய பணிப்பாளர், பணிமனையிலிருந்து கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். திரும்பப் பெறக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 100/- திரும்பப்பெற முடியாத பணமாக ரூபா 25/- செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை இலக்கம் | நிலையத்தின்பெயர் | வேலையின்விபரம் |
|---|---|---|
| 1. | மாவட்டவைத்தியசாலை, கிளிநொச்சி | கொறிடோர் (Covered way) கழிவுநீர்குழி |

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டபின் கடித உறையில் அடைக்கப்பட்டு மெழுகுசீல் வைப்பதுடன் கடித உறை இடதுபக்க மூலையில் ''சுகாதாரப் பகுதியின் கட்டிட வேலை'' என்று குறிப்பிட்டு மேற்கூறிய திகதிக்குமுன் இப்பணிமனையில் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்படவேண்டும் அல்லது இப்பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் போடப்படவேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் அவருடைய கேள்வி ஏற்கப்பட்டதென அறிவித்தல் கிடைத்தவுடன் ஒரு வார காலத்திற்குள் நியமிக்கப்பட்ட வைப்புப் பணத்தைச் செலுத்துவதுடன் இதற்கான ஒப்பந்தத்திற்கும் உடன்படல் வேண்டும் அவ்வாறு செய்யத்தவறின் அவரது கேள்வி இரத்துச்செய்யப்படலாம்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விகாரர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வித்தொகையின் 5% ஒப்பந்தத்தின்படி வேலையைத் திருப்திகரமாக செய்துமுடிக்க பிணைப்பணமாக பிராந்திய சுகாதார பணிப்பாளர் நியமிக்கும் வங்கியில்கட்ட வேண்டும்.

வேலை திருப்திகரமாக முடிந்தபின் இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், எதையாவது நிராகரித்தல் அல்லது முற்றாக நிராகரித்தல் ஆகிய உரிமைக்கும் அனைத்து தீர்மானங்கள், இறுதிமுடிவுகள் யாவும் கேள்விச் சபையைச் சார்ந்தது.

சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சுகாதாரசேவைகள் பிராந்திய
பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம், ஏப்பிரல், 1986. [A-657

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இந்நிறுவனங்களை திறந்து உதவுக"

## யாழ். வர்த்தக சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். வர்த்தக சங்கத்தின் புதிய செயற்குழு சங்க தலைவர் திரு. கே. நடராசா தலைமையில் கூடியபோது கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேறியது:

''மனிதாபிமான அடிப்படையிலும் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகி பரிதாபமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் இருபதிற்கும் மேற்பட்ட ஊழியர்களின் நலன் கருதியும் குறித்த சோமசுந்தரம் கம்பனி, அயோசியேட்டட் மோட்டோர்ஸ், நஷனல் மோட்டோர்ஸ் ஆகிய நிறுவனங்களைப் பூட்டி வைத்திருப்பவர்கள், இந்நிலையங்களில் திறப்புகளை உரியவர்களிடம் ஒப்படைத்து இவை மீண்டும் இயங்க உதவுமாறு சம்பந்தப்பட்டவர்களைச் சங்கம் கேட்டுக்கொள்கிறது ஒருவாரகாலத்திற்குள் நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்யக் கூடியவாறு சூழ்நிலை உருவாக்கப்படாவிட்டால் யாழ். வர்த்தகர் சங்கம் நேரடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகலாம் என்பதைச் சம்பந்தப்பட்டவர்களுக்குச் சங்கம் மிக வேதனையுடன் அறியத்தர விரும்புகிறது.''

## எதிர்ப்புத்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ந்த எதிர்ப்புத்தினம் எதிர்பாராத நடைமுறைச் சிக்கல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இத்த எதிர்ப்புத்தினம் அரசினல் தமிழ்பேசும் மக்கள் மீது மேற் கொள்ளப்படும் ஒடுக்கு முறையையும் இனப்படு கொலையையும் கண்டித்து நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

இது சம்பந்தமான இணைப்புக்குழுவின் ஆலோசனைக்கூட்டம் இம்மாதம் 15 ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் நடைபெறும்.

# பாதிக்கப்பட்ட பலாலி மக்கள் கவனத்திற்கு...

[மாவிட்டபுரம்]

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பினல் பாதிக்கப்பட்டவர்கள் சத்தியக்கூற்று நிவாரணப் பத்திரங்களை உடன் பெற்றுப் பூர்த்திசெய்து அந்த அந்தப் பகுதிப் பிரஜைகள் குழுக்களுடன் உடன் தொடர்புகொள்ளும்படி வலி வடக்குப்பிரஜைகள் குழுக்களின் ஒன்றியத்தின் இணைச்செயலாளர் திரு. எஸ். சண்முகலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்டுவெளியேறிய மக்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்கும் வகையில் வலி. வடக்குப் பிரஜைகள் குழுக்களின் ஒன்றியம் விசேட சத்தியக்கூற்று நிவாரணப் பத்திரங்களைத் தயார்செய்து தெல்லிப்பளை ப. நோ கூ சங்கத்தால் அச்சடிக்கப்பட்டு விநியோகிக்கும் வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பத்திரங்களை அவ்வப் பகுதிப்பிரஜைகள் குழுக்களிடமிருந்து பெற்றுப் பூர்த்தி செய்து வீமன்காமம் மகா வித்தியாலயத்தில் இயங்கும் தற்காலிக காரியாலயத்தில் ஒப்படைக்கவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

# உணவுமுத்திரை பெறுமதி ரூ.600 வருமான எல்லை ரூபா 700

[கொழும்பு]

உணவு முத்திரை வழங்கும் திட்டத்தில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இனிமேல் 700 ரூபாவுக்குக் குறைவாக வருமானம் பெறுபவர்கள் இந்த உணவு முத்திரைகளைப் பெறத்தகுதியுடையோராவர். அத்துடன் இனிமேல் 600 ரூபா மதிப்புடைய முத்திரைகள் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் 300 ரூபாவுக்குக் குறைவான வருமானம் உடயவர்களுக்கே இந்த உணவு முத்திரைகள் வழங்கப்பட்டன. அதுவும் 300 ரூபா மதிப்புடைய முத்திரைகளே வழங்கப்பட்டன வென்பது குறிப்பிடத்தக்கது. [செ]

# வன்செயலால் பாதிக்கப்பட்ட பொன்னகர் மக்களுக்கு ஆடுகள் அன்பளிப்பு

[கிளிநொச்சி]

முருகண்டிப் பொன்னகர் கிராமத்தில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனித முன்னேற்ற இயக்கத்தின் கியூடெக்ஸ் பண்ணையினர் இலவசமாக ஆடுகள் வழங்கினார்கள்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆடுகள் வழங்கும் நிகழ்ச்சி மனித முன்னேற்ற உத்தியோகத்தரும் பொன்னகர் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவருமான பா கணேசபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மனித முன்னேற்ற இயக்கத் தலைவரான வண.பிதா ம ஈ பயஸ் அடிகளார் அகதிகளுக்கு ஆடுகளை கையளித்தார். ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆடு வீதம் வழங்கப்பட்டது.

மாவட்டச் காணி அதிகாரியும் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் அலுவலக நிர்வாக அதிகாரியுமான திரு. வேலுப்பிள்ளை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில், ''காலத்திற்குக் காலம் இடம்பெறும் வன்செயல்களால் பாதிக்கப்படும் மக்கள் பல இடங்களிலும் இருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சியில்தான் கூடுதலாகத் தஞ்சமடைவதுண்டு. இவ்வாருன மக்களுக்கு எமது அரசாங்க அதிபர் திரு. ஜெகநாதனின் ஆதரவுடன் காணிகளை வழங்கி வருகிறோம். இந்த வகையில் பொன்னகர் கிராமமக்களும் காணிச்சொந்தக்காரர்களாக ஆவனசெய்வோம்'' என்றார்

விவசாய உத்தியோகத்தர் எஸ். சிவஞானசுந்தர, புகையிரத அதிபர் திரு. சிவா முதலானோரும் பேசினர்.

# கொழும்பில்பலத்த பாதுகாப்பு ஏற்பாடு!

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு வெளிமாவட்டங்களிருந்து பொலிஸார் கொண்டு வரப்படவிருப்பதாக பொலிஸ் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரம் கொழும்பு மத்திய தந்திக் கந்தோரில் நடந்த குண்டுவெடிப்பையடுத்து தமிழ்த் தீவிரவாதிகள் மேலும் பல குண்டுவெடிப்புக்களை நடத்தலாம் எனஎதிர்பார்க்கப்படுவதனல் தென்னிலங்கையில் குறிப்பாக கொழும்பு நகரில் விசேஷ பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

83ம் ஆண்டில் தமிழருக்கெதிரான கலவரங்களை வழி நடத்திச் சென்றவர்கள் தற்போது கண்காணிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது. அத்துடன் அரசாங்க திணைக்ளங்கள் கூட்டுத்தாபனங்கள், தனியார் நிறுவனங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் காலத்துக்குக் காலம் கண்காணிக்குமாறு நாடெங்கிலுமுள்ள பொலிஸாருக்குப் பொலிஸ் மா அதிபர் திரு. சிறில் ஹேரத் உத்தரவிட்டுள்ளார்.

## தனிக்கட்டிடம்

(வவனியா)

வவனியா கச்சேரிப் பதிவுகாரர் அலுவலகத்திற்குத் தனியான கட்டிடமொன்று நிறுவப் படுகின்றது. பன்முகப்படுத்தப்பட்ட வாவு செலவுத் திட்டத்தின் கீழ் இக் கட்டிடத்திற்கு இரண்டரை லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இந்த கட்டிடத்திற்கு வைபவரீதியாக அரச அதிபர் திரு கே ஸி லோகேஸ்வரன் அடிக்கல் நாட்டினர்.

## புதிய இயக்குநர்கள்

(புலோலி)

புலோலி ப. நோ. கூட்டுறவுச்சங்க புதிய இயக்குநர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:-

திரு எஸ். நடராஜா, டாக்டர். கே. கிருஷ்ணபிள்ளை, திரு. வே, தயாநிதி திரு வை சோமசுந்தரம். திரு. கே. வாசுதேவன், திரு வே, ஐயாத்துரை, திரு. எஸ் சதிர்காமத்தம்பி, ஆகியோர் ஏகமனதாக இயக்குநர்சபை உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டனர். அத்துடன் பொதுச்சபை உறுப்பினர்கள் 10 பேரைக் கொண்ட ஆலோசனைக் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இதுவரை புலோலி ப. நோ கூ, சங்க நிர்வாகம் யா.ழ் சிரேஷ்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாராால் நியமிக்கப்பட்ட பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு எஸ். தனிகாசலம் தலைமையிலான இயக்குநர்சபையினல் நிர்வாகிக்கப் பட்டுவந்தது.

## WANTED

Wanted Female Accounts Trainee with Pass in Accounts in A/L. Living within J M C area. Application Closing date: 16 - 05 - 86. Advt No C-2281 C/o Eelanadu, Jaffna. [C 2281]

## தமிழீழ மாணவர்பேரவை பிரசுரம்

[யாழ்ப்பாணம்]

''ஏகாதிபத்தியங்களினதும், மேலாதிக்கத்தினதும், ஸ்ரீலங்கா இராணுவத்தினதும் அரசியல் இராணுவ அராஜகங்களையும், சித்திரவதைகளையும் நாம் கண்ணீர் மல்கக் கண்டிக்கின்றோம். ஆனல் அதனையும் மிஞ்சும் வகையில் கடந்தசில நாட்களாக நமதுமண்ணில் நிகழ்ந்த கொடுமைகளை ஏன் மௌனிகளாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்'' இவ்வாறு தமிழீழ மாணவர் பேரவையினல் 'நெஞ்சை மிதித்த கடந்த நாட்கள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

''தமிழீழ விடுதலை இயக்கம் விடுதலைப் போராட்டத்தின் திசையிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு பிற்போக்குப் பாதையில் செல்கிறது என்ற கருத்தை நாம் மறுக்கவில்லை. இது ஆய்வுக்கும் விமர்சனததிற்குமுரியது. இப்பாதையில் செல்லும் விடுதலை அமைப்பை எவ்வாறு கையாளப் போகிறோம், எவ்வகையில் ஆரோக்கியமான நற்பாதைக்கு அழைத்துச் செல்லப் போகிறோம் என்பதனை தீர்மானிக்க வேண்டியவர்கள் மக்களே.

''இம் மண்ணையும் மக்களையும் நேசித்த ஒரே காரணத்திற்காக உயிர்துறந்த எம் இனிய மாணவ தோழர்களுக்கும் ஏனைய போராளிகளுக்கும், மக்களுச்கும் தமிழீழ விடுதலை இயக்கத் தலைவர் ஸ்ரீசபாரத்தினத்திற்கும் கண்ணீர் அஞ்சலி'' என்றும் அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்த் தலைவர் ..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### சிங்கள தீவிரவாதம்

தமிழ் மக்களின் முழுக் கோரிக்கைகளையும் தான் நிறைவேற்றினல் அதனல் சிங்களத் தீவிரவாதம் உருவாகும் எனக்குறிப்பிட்ட திரு. ஜெயவர்த்தன தமிழ்க்கோரிக்கைகளைநிறைவேற்றுவிட்டால் அவர்கள் குண்டுகளை வைக்கிறுர்கள் எனவும் கூறினர்

இலங்கையிலுள்ள பிரச்னை இனிமேலும் இனப்பிரச்னையாக இல்லையென்றும் அது ஒரு வெறும் பயங்கரவாதம் எனவும் குறிப்பிட்ட ஜனதிபதி இப்பிரச்னையில் இந்தியாவின் போக்குக் குறித்துச்சாடினர்.

இப்பிரச்னைகது ஒரு உடனடித்தீர்வு காணவேண்டும் எனவும் குறிப்பிட்டார்

இப்பேட்டி பழைய பாராளுமன்றில் வைத்து அளிக்கப்பட்டது.

### அரசு பொறுமையிழக்கிறது

திரு. ஜெயவர்த்தன தொடர்ந்து தமது பேட்டியில் கொழும்பில் அண்மையில் நடந்த குண்டு வெடிப்புகளுக்குப் பின்னர் தமது அரசு பொறுமையிழந்துள்ளதென்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சமஷ்டி அடிப்படையில் சில சலுகைகளை வழங்க தமது அரசு முன்வந்துள்ளதென்றும் இதனைத் தமிழ்த்தீவிரவாதிகள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர்களை ராணுவ ரீதியில் ஒழிக்க வேண்டிவரும் எனவும் குறிப்பிட்டார்.

### களைத்துவிட்டேன்

79 வயது நிரம்பிய திரு. ஜெயவர்த்தனதன்னைப்பேட்டி கண்டவரிடம் தான் மிகவும் களைப்படைந்துள்ளதாகவும் தெரிவித்து சென்றுவிட்டார் [illegible]

## முத்திரைச்சந்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப்பிற்பகல் 4 மணியளவில் முகாமிலிருந்து இவர்கள் புறப்பட்டுச் சென்றனர். 6 குடும்பங்கள் மட்டுமே முகாமில் தங்கியிருந்தன.

இவ் விஷயத்தை அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வருவதாக நலன் விரும்பிகள் சிலர் உறுதியளித்ததைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு மறியலைக்கைவிட்டு அகதிகள் மீண்டும் முகாமிற்குத் திருப்பிச்சென்றனர்.

(க)

## எயர் லங்கா ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரை செலவழித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 3-ம் திகதி எயர் லங்கா விமானமொன்றில் குண்டொன்று வெடித்ததும் அதனல் 16 பேர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே

[ய-செ]

## இலங்கை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

றும், இன்னும் சிலநாட்களில் இப்பணி முடிந்து விடுமெனவும் குறிப்பிட்டார்.

இந்தியக் தூதுக்குழுவிடம் இலங்கை சமர்ப்பித்துள்ள ஆலோசனைகள் சம்பந்தமான சில விளக்கங்கள் கோரப்பட்டுள்ளனவென்றும் அவற்றை இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் திரு பேர்னட் திலரத்தின அண்மையில் புதுடில்லி கொண்டுவருவார் எனவும் திரு. பண்டாரி பேட்டியில் கூறினர். [செ]

## புதிய ராணுவ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களை அமைத்துவருகிறது. இங்கு பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும் நீங்கள் வடக்கு-கிழக்குக்கு அனுப்பப்படுவீர்கள். நீங்கள் உண்மையான தீவிரவாதிகளை எதிர்த்துப்போராட வேண்டும். பொதுமக்கள் மீது கைவைக்கக்கூடாது [க]

## யாழ். - கொழும்பு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அநுராதபுரத்திலிருந்து யாழ்பபாணம் நோக்கிப் பதினைந்து வாகனங்களில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினரே இவ்வாறு வாகனங்களைத் தடுத்துவைத்தனர் இதனல் சில மணித்தியாலங்கள் தாமதித்தே இவவாகனங்கள் கொழும்பு சென்றன.

(து)

எம்பயர் திரையில்
பானுச்சந்தர்—சுமன்
நல்லது நடந்தே தீரும்

லிடோ Jaffna
10-30, 2-30, 4-30 6-30
SUDDEN IMPACT
(Mudrer, Action and Thrills)
[Cinimascope and Colour]

2வது மாதம்
வெலிங்டன்
10-30, 2-30, 6-15
சிவகுமார், மோகன் அம்பிகா, கவுண்டமணி நடித்த
நான் பாடும் பாடல்
(கலர்)

லிபேட்டி சினிமாவில்
Mark Harmon நடித்த
TUAREC THE DESERT MARRIOR
கிராமங்களில் சென்று சித்திரைவதைசெய்யும் இராணுவத்தினரை பழி வாங்கும் தீரமிக்க இளைஞனின் கதையை சித்தரிக்கும் வர்ணப்படம்.
காட்சி நேரங்கள் மாற்றப்பட்டுள்ளன.
10-00, 2-00, 4-15, 6-30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

திங்கட்கிழமை 12-5-86

## ஏழாலையில் சங்காபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

ஏழாலை மத்தி அருள்மிகு கண்ணகை அம்பாள் ஆலய கும்பாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்திவிழா இன்று சங்காபிஷேக விழாவாக நடைபெறுகின்றது இன்றுகாலை 10 மணிக்கு சங்காபிஷேகமும் பகல் 1 மணிக்கு ஆசியுரையும் 2 மணிக்கு மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

## கண்ணிவெடி: ராணுவம் மீட்பு
# வயோதிபர் சூட்டுக்குப்பலி
## டாக்டர் காயம்

[வவனியா]

ஓமந்தையிலிருந்து மாங்குளம் புறப்பட்டுச் சென்ற இராணுவத்தினர் புளியங்குளம் அருகில் யாழ் வீதியில் நிலக்கண்ணி வெடியொன்றை மீட்டெடுத்தனர்.

இதனைத் தொடர்ந்துஇராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் விவசாயியான புளியங்குளம் வாசி முருகேசு [65 வயது] ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். அத்துடன் அருகிலிருந்த ஐந்து வீடுகள் ஆயுதப்படையினரால் எரிக்கப்பட்டன. சிலர் காயமடைந்தனர். இத்துப்பாக்கிப் பிரயோகத்தின் போது இரணை இலுப்பைக்குளம் உதவி வைத்தியர் எஸ். கிருஷ்ணமூர்த்தியும் [35 வயது] காயமடைந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக வவனியாப் பிரஜைகள் குழுவிடம் புகார் செய்யப்பட்டது. வவனியாப் பிரஜைகள் குழுச் செயலாளர் திரு.எஸ் வி பரராஜசிங்கம் வவனியா இணைப்பதிகாரியுடன் தொடர்புகொண்டு இச்சம்பவம் பற்றித் தெரிவித்த பொழுது தங்களுககும் இச்சம்பவத்திற்கும் தொடர்பில்லையென்றும் இதுபற்றி விசாரிப்பதாகவும் இணைப்பதிகாரி கூறினாராம். [து]

## கொழும்பு - யாழ் லொறியில் கொள்ளை

[நீர்கொழும்பு]

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் லொறியொன்று மீரிகமவுக்கு அருகில் இனந்தெரியாதவர்களால் வழிமறிக்கப்பட்டு 78 000 ரூபா பெறுமதியான பொருள்களும், 12,500 ரூபா ரொக்கப்பணமும் கொள்ளையடிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது

இச்சம்பவம் நேற்று முன்தினம் நடைபெறறது.

# ஜி. ஸி. ஈ. உயர்தர அனுமதி: பணிப்பாளர் நிபந்தனைகள்

[யாழ்ப்பாணம்]

பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்பில் மாணவர்களைச் சேர்க்குப்போது முதலாவது முன்னுரிமை அதே பாடசாலையில் படித்த மாணவர்களுக்கும், இரண்டாவது உரிமை அந்த கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கும், மூன்றாவது முன்னுரிமை அசபாவிதங்களினால் இடம்பெயர்ந்து வந்த மாணவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் வடபகுதி பாடசாலை அதிபர்களுக்கு பணிப்புரைவிடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது அங்கு அவர் மேலும் பலவேண்டுகோள்களை அதிபர்களுக்கு விடுத்தார்.

மாணவர்களைப் பாடசாலைகளில் அனுமதிக்கும் விடயம் தொடர்பாக பெற்றோர்களைப் பாடசாலைக்கும் கல்விக்கந்தோருக்கும் இடையே பல தடவைகள் செல்ல வைக்க வேண்டாம் என்று அதிபர்களைக் கேட்டுக்கொண்டார்.

பாடசாலையில் அனுமதி கோரும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை உரிய காலத்தில்பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தவறும் மாணவர்கள் பாடசாலை அதிபரின் குறிப்புடன்கல்வித் திணைக்களத்துக்கு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

உயர்தர வகுப்புக்களைக் கொண்ட பாடசாலை அதிபர்கள்நேரசூசிகையைஉரியமுறையில் மாற்றி அமைக்கும்படியும் ஆசிரியர் பற்றாக்குறை இருப்பின் திணைக்களத்துடன் தொடர்பவைத்து செதிக் கட்டண ஆசிரியரைநியமிக்கமுடியும்என வும் தெரிவித்தார்.

இவ்வாண்டு உயர்தர வகுப்புக்களில் மாணவர்களைச்சேர்க்கும்போது பாடசாலை அதிபர்கள் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட சுற்றுநிருபத்தைக் கவனத்தில் எடுக்குமாறும் வேண்டியுள்ளார். [ஐ]

# யாழ்-கண்டி வீதி திருத்தம்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் இடையிலான கண்டி வீதி திருத்தவேலைகள் ஆரம்பமாகி உள்ளன.

கைதடிப்பகுதியிலும் வீதித் திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன பல இடங்களில் சேதமடைந்துள்ள வீதிப்பகுதியில் கல்லுடைக்கும் வேலைகளும் எழுதுமட்டுவாழ்ப்பகுதியில் திருத்த வேலைகளும் நடைபெறுகின்றன.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்திற்கு சமீபமாக பாலமொன்று கண்டிவீதியில் அமைக்கும் வேலையும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கண்டி வீதித் திருத்த வேலைகள் மெதுவாகவும் தாமதமாகவும் நடைபெறுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்.கண்டி வீதியின் நிலை பற்றி 'ஈழநாடு' அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## யார் இந்த தர்மலிங்கம்?

[யாழ்ப்பாணம்]

மயக்கமடைந்த நிலையில் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் மரணமானார்.

இவரிடம் இருந்த அடையாள அட்டையில் ''க. தர்மலிங்கம் மூன்றுமுறிப்பு, வவனியா'' என்று விலாசம் தெரிவிக்கப்பட்டுள்ளது. புங்குடுதீவு என்றும் எழுதப்பட்டிருக்கிறது உறவினர்கள், யாழ் ஆஸ்பத்திரி பொலிஸாருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [க]

## 5 மாதத்தின் முன் புதைத்த மகளின் சடலத்துடன் வீடு வந்த தந்தை!

[நெடுந்தீவு]

தனது பிள்ளையின் பிரிவைத் தாங்காத தந்தை பிள்ளை இறந்து ஐந்து மாதங்களின் பின் புதைகுழியிலிருந்து பிள்ளையின் சடலத்தை வீட்டுக்கு எடுத்துச் சென்ற சம்பவம் நெடுந்தீவில் நடந்துள்ளது.

நெடுந்தீவு கிழக்கு செபநாயகபுரத்தைச் சேர்ந்த மனுவல் பிரஞ்சி என்ற இளம் தந்தையே மகளின் மீதுவைத்திருந்த அளவுகடந்த பாசத்தினால் இப்படி செய்துள்ளார். பிரஞ்சியின் 4 வயதுப் புதல்வியான பற்றிமா அலெஸ்ரீனை சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்றிற்குப் படிக்கச் செல்லும் வேளை துறைமுகத்திற்குட் பிரயாணிகளை ஏற்றி இந்த உழவு இயந்திரம் ஒன்றினால் மோதப்பட்டு ஸ்தலத்திலே மரணமானார்:

இந்தப் பிரிவு தந்தையை வாட்டிவந்ததென்றும தந்தை புதை குழியிலிருந்து உருக்குலைந்த நிலையில் பிள்ளையின் சடலத்தை மீட்டு காகிதப் பையினுல் சுற்றி வீடுகொண்டு வந்தாரென்றும் அயலவர்கள் எவ்வளவு கூறியும் திரும்ப புதைப்பதற்கு கொண்டு செல்ல மறுத்தார் என்றும் பின்னர் இளைஞர் கோஷ்டியினரின் தலையீட்டினால,காகிதப் பெட்டியொன்றில் சடலம் வைக்கப்பட்டு மீண்டும்புதைக்கப்பட்டது என்றும் தெரிய வந்துள்ளது. இச்செயலை ஏராளமான பொதுமக்கள் பார்த்து கண்கலங்கினர்.

## நாவாந்துறை மக்கள் விடுத்துள்ள பிரசுரம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 29ம் திகதி மாலை நாவாந்துறையில் இடம்பெற்ற அசம்பாவிதச் சம்பவத்தைக் கண்டித்து பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

நாவாந்துறை மக்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ள அப்பிரசுரத்தில் குறித்த தினம் ஓர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் இன்னொரு இயக்கஇளைஞர் ஒருவரைச் சுடமுயன்றது பற்றியும் அச்சமயம் பொதுமக்கள் கூடி விவாதம் ஏற்பட்டது பற்றியும், இருவர் அந்த இடத்திலேயே சுடப்பட்டு இறந்தது பற்றியும் ஐவர் காயமுற்றது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தையடுத்து அங்குநின்ற ஒரு இயக்கத்தின் வாகனம் பொது மக்களால் எரிக்கப்பட்டது பற்றியும் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு மே மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

## படுவான்கரையில் வாந்திபேதிக்கு 15 சிறுவர் பலி!!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு படுவான் கரைப் பகுதியில் வாந்திபேதி நோயினால் இதுவரை 15 குழந்தைகள் இறந்துள்ளனர் இவர்களனைவரும் மூன்று வயதுக்குட்பட்டவர்கள்.

படுவான்கரைப் பிரதேசத்தில் போக்குவரத்துச் சேவைகள் சீர்குலைந்துள்ளதாலும் பாதுகாப்புக் காரணங்களினாலும் வைத்தியர்கள் இப்பகுதிக்குச் செல்ல அஞ்சுவதனால் இந்நோயைக் கட்டுப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட முடியவில்லை எனத் தெரியவருகிறது

மாதங்களையில் ஆரம்பித்த இந்த நோய் அடுத்துப் படுவான் கரையிலேயே தோன்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## நாளை கருத்தரங்கு

[வவனியா]

நாளை செவ்வாய்க்கிழமை வவனியாவில் வளர்ந்தோர் சத்துணவுக் கல்வித்திட்டம் பற்றிய கருத்தரங்கு ஒன்று புதுக்குளம் கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுளளது.

புதுசகுளம் கிராமோதய சபைத்தலைவர் திரு பி. பத்மநாதன் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறும்

வவனிய அரச அதிபர் திரு. கே. ஸி. லோகேஸ்வரன், உதவி அரச அதிபர் திரு. க. ஐயம்பிள்ளை, உதவித்திட்டப் பணிப்பாளர் திரு. ஸ்ரீ துரைசிங்கம், வைத்திய கலாநிதி எஸ். மாணிக்கராசா ஆகியோர் கருத்தரங்கில் உரையாற்றவுள்ளனர். என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீனவர் கடலுக்குப்பலி

[மாவிட்டபுரம்]

மயிலிட்டி மேல் வீதியை சேர்ந்த 9 பிள்ளைகளின் தந்தையான சின்னையா கயிலாயபிள்ளை என்றும் 55 வயது மீனவர் கடந்த வெள்ளியன்று அதிகாலை 5 மணியளவில் சரையில் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது மயக்கமுற்றுக் கடலில் வீழ்ந்து மரணமாதாகத் தெரிகிறது

இவரது சடலம் தேடப்பட்டுவருகிறது.

## கடைஉடைத்துத் திருட்டு

[வவனியர]

வவனியாவிலுள்ள பிரதான வீதியிலுள்ள கடையொன்று உடைக்கப்பட்டு பாதணி, உடுபுடவைகள் உட்பட எண்ணாயிரம் ரூபாபெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

எட்டுப்பாரிய பூட்டுக்களை உடைத்து இத்திருட்டு நடைபெற்றுள்ளது.

## தட்டுப்பாடு

(சித்தன்கேணி)

சித்தன்கேணி உபதபாற் கந்தோரில் முத்திரைகளுக்கும் வான் கடிதங்களுக்கும் அடிக்கடி தட்டுப்பாடு நிலவுகின்றது இக்கந்தோரில் வாரத்தில் ஒரு நாளைக்குத்தான் முத்திரைகளும் வான்கடிதங்களும் வாங்கக்கூடியதாக இருக்கின்றது,

## மரண அறிவித்தல்

### V. R S. மகாதேவன் (வாசு)



தொண்டைமானாற்றைச் சேர்ந்த யாழ்ப்பாணம் சுந்த மூர்த்தி அன் சன்ஸ் உரிமையாளர் இராசரெத்தனம் சுந்தரமூர்த்தி-கமலாப்பாள் தம்பதிகளின் புத்திரன் மகாதேவன் 07-05-86ல் கொழும்பில் அகால மரணமானார். இவர் உருத்திரகுமாரன்,சிவபாலன் கிரிசா பிரேமலதா, சதாயினி, இராஜரட்டணகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவர். ஈமக்கிரியைகள் நேற்று (11-05-86 ஞாயிற்றுக்கிழமைகொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றது.

இத்தகவலை உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

210 (76), ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

[C-2283]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். வண்ணை ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் நாச்சிமார் கோவில் மகாகும்பாபிஷேக விழா-சிறப்பு மலர்

# ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலய வரலாறு

இகவுலகில் நாம் ஆனந்தம் என்று நினைத்து அனுபவிக்கும் சுகங்கள் யாவும் அன்னை பராசக்தியின் பேரருட் கருணையினுல் நமக்குக் கிடைப்பவை. அண்டசராசரங்களையும் ஈன்ற அன்னை ஸ்ரீகாமாக்ஷி என்ற பேரில் வழிபடும் அடியார்களின் துன்பந் துடைத்து, அல்லல் அகற்றி, இடர் களைந்து வீற்றிருக்கும் இடம் தான் யாழ். வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயம்.

சரித்திரப் பிரசித்திபெற்ற இவ்வாலயம் குளங்கரை மருதடி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் கோயில் என்று வழங்கப்பெற்று இப்போது நாச்சிமார் கோவில் என எல்லோராலும் புகழ்ந்துரைக்கப்படும் புனித ஸ்தலமாக மிளிர்கின்றது,

இன்று குடமுழுக்குக்காணும் இவ்வாலயம்பற்றி தொனறு தொட்டு நிலவிவரும் கர்ண பரம்பரைக் கதை ஒன்றுண்டு. நாவல் மரங்கள் நிறைந்து விளங்கிய இவ்விடத்தில் அம்பாள் கோயில் கொண்டு இருக்கும் நாளில் ஒரு மீன் வியாபாரம் செய்யும் பெண் அம்மரத்தடியே சிறுநீர் கழித்தாள். அப்போது இடத்தை அசுத்தம் பண்ணிய குற்றத்துக்காக அம்பிகை அவளது ஸ்தனங்களில் ஒன்றைக் திருகிவிட்டாளாம். அதனுல் அவளுக்கு முலைதிருகி நாச்சியார் என்ற பெயரும் வழங்கலாயிற்று.

அன்றுமுதல் அவ்விடத்தில் சிறு ஆலயம் கண்ணக்கை என்னும் மூதாட்டியால் அமைக்கப்பெற்று வழிபாடு இயற்றப்பட்டு வந்தது. ஆதிகாலந்தொட்டே சிறுகச்சிறுக முன்னேறிவந்த இந்த ஆலயம் இன்றுவானளாவிய கோபுரத்துடனும் வசீகரமான தோற்றத்துடனும் மிளிர்கின்றது.

அருள்பாலிக்கும் அன்னை காமாக்ஷி, விநாயகர், சுப்ரமண்யர் சகிதம் இங்கே எழுந்தருளி அழகுத் திருக்கோலத்துடன் காட்சி தருகிருள். அழகான இராஜகோபுரம் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. ஓசைதரும் நாதமணிகள் இருமருங்கும் அழ்குக்கு அழகூட்டுகின்றன.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் சக்தி வழிபாடு செய்ய வேண்டும். சக்தியில்லையேல் சிவமில்லை என்பார்கள் காமம் என்ருல் அன்பு; அக்ஷி என்ருல் கண் உடையவள் ஆகவே அன்புக்கண் உடைய உமையவள் கரும்பும் மலரும் கொண்டு ஈசுவரனைப் பணிந்தாள். அதனுல் அவளுக்கு அப்பெயர் ஏற்பட்டது. அன்புதான் இன்ப ஊற்று. அன்புதான் இன்பஜோதி. அன்புதான் உலக மகாசக்தி. ஆகவே அன்பின் அடிப்படையில்தான் அகிலமே செயற்படுகின்றது

'காமக்கண்ணி' என்று காமாக்ஷிக்கு இன்னொரு பெயர் உண்டு. இவளுடைய அன்பு ததும்பும் கண்களிலே அருள் சுரந்து கொண்டேயிருக்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காஞ்சீபுரத்தில் உள்ள ஒணகாந்தன் தளியில் பாடும் போது,

இளஞ் சைவப்புலவர்
**இராசையா ஸ்ரீதரன்**

வாரிருங் குழல்வாள் நெடுங்
கண் மலைமகள் மது
விம்மு கொன்றை
தாரிரும் தடமார்பு நீங்காத்
தையலாள் உலகுய்ய
வைத்த
காரிரும் பொழில் கச்சி
மூதூர்க் காமகோட்டம்
உண்டாக நீர்போய்
ஊரிடும் பிச்சை கொள்வ
தென்னே ஒணகாந்தன்
தளியுளீரே!

என்று சுந்தரத் தமிழிலே பாடுகின்ருர். இந்தத் 'தளி' என்பது கோயில் இங்கு தனியாக அம்பாள் இல்லாததால் உலகுக்கெல்லாம் உணவிடும் உமையிருக்க நீ ஏன் பிச்சாடனுய்த் திரிகிருய்? என்று சிவனைக் கேட்கின்ருர்.

காமாக்ஷி அன்னையைக் கை தொழுதால் பழவினை அறும் பாவந் தொலையும். அவளின் கடாட்சம் கிடைத்துவிட்டால் எமது காம, குரோத, லோப, மோக, மத, மாற்சரியம் யாவும் அற்றுப்போகும். அதற்கும் அவளையே துதிக்க வேண்டும்.

அன்னையின் பேரருட் கருணையினுல்தான் நாம் இப்பூவுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்ருேம். அவளது கடைக்கண் பார்வையே போதும், துன்பம் தூள் தூளாகிவிடும். சித்திரா பௌர்ணமியிலே சிறப்பாக நடைபெறுவது தீர்த்தோற்

(4-ம் பக்கம் பார்க்க)



## எல்லோருக்கும் நன்றி கூறுவோம்

மேற்படி இராசகோபுரத் திருப்பணி, மணிக்கோபுரத் திருப்பணி, மற்றும் ஆலயதிருப்பணிகளுக்கும் பொருளுதவியளித்த அடியார்களுக்கும், இத்திருப்பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றித் தந்த சகல கலைஞர்களுக்கும், வேதாகம கிரியைகளை முறைப்படி நடாத்திய சிவாச்சாரியர்களுக்கும், அரிய பெரிய தொண்டுகளைச் சிரமதான மூலம் பணியாற்றிய ஸ்ரீ காமாக்ஷி சனசமூக இளைஞர் மற்றும் ஏனையோர்களுக்கும், நிதிவசூல் செய்துதவிய அன்பர்களுக்கும், சிறப்புமலரை வெளியிட கட்டுரைகள், ஆசியுரைகள் நல்கியவர்களுக்கும் விளம்பரங்கள் நல்கிய ஸ்தாபனத்தார்களுக்கும், இம்மலரைத் தொகுத்து வெளியிட உதவிய அன்பர்கட்கும் மற்றும் ஏனைய தொண்டர்களுக்கும், 'ஈழநாடு' பத்திரிகை ஸ்தாபனத்தார்கட்கும் எல்லாம்வல்ல அம்பிகையின் அருள் நிறைந்து துலங்க வேண்டுமெனப்பிரார்த்தித்து இத்தால் எமது நன்றியைத் தெரிவிக்கின்ருேம்.

**செயலாளர்**
தர்மகர்த்தாசபை,
வண்ணை ஸ்ரீகாமாக்ஷி அம்பாள்
தேவஸ்தானம்.

# கும்பாபிஷேக ஆசியுரை

"அருள்மிகு காமாக்ஷி அம்பிகையின் கடைக்கண் பார்வை அருள்கிடைக்கவேண்டுமென்று உங்கள் எல்லோருக்கும் ஆசி கூறிக்கொள்கின்றேன்."

"பொருளற்ருர் பூப்பர் ஒருகால் அருளற்ருர் அற்ருர் மற்ருதலரிது." மனிதன் பூமியில் ஏதோ ஒரு நாட்டில் ஏதோ ஒரு ஊரில் புண்ணிய வசத்தால் கூன் குருடு நீங்கி மானிடப்பிறவி எடுக்கிருன். தனக்கு என்று அவன் ஆருவது அறிவினுல் தேடிக் கொள்ள விரும்புவது அழகிய வீடு அதில் குளிப்பதற்கு வசதியாக நீர் வசதிகள், வீட்டைச்சுற்றி அழகிய பூங்கா, நல்லதொரு வாகன வசதி, நல்ல மனைவி, மக்கள் இவைகளே. இவைகளெல்லாம் அவனுக்குக் கிடைப்பது முற்பிறவியில் போட்டுவைத்தவைகளே என்பதுதான் வேதாகமங்களுடைய உண்மை

இப்படி அந்த ஊரிலுள்ள மனிதர் ஒவ்வொருவரும் எங்கே போட்டுவைத்தனர்? எங்கே போட்டுவைக்கவேண்டும்? என்பதற்கு அத்தாட்சியாக அவ்வூர் மக்கள் எல்லோராலு அமைக்கப்படும் ஆலயமே, வங்கியாகவும், நீதி ஸ்தலமாகவும் விளங்குகின்றது. இப்படிப்பட்ட ஓர் ஆண்டவனது வங்கியில் போட்டுவைப்பதற்குரிய காலமே ஆலய புனருத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக தினமாகும். ஆலயத்திலுள்ள ஒவ்வொரு பகுதியையும் மக்கள் எல்லோரும் தனித்தனியே ஒருமித்தோ விநாயகப்பெருமானுக்கென்று ஓர் ஆலயம் அம்பிகைக்கென்று ஓர் ஆலயம், விஷ்ணுவுக்கென்று ஓர் ஆலயம் இவைகளுக்கென்று புண்ணிய தீர்த்தக்கிணறுகள், நறுமணம்கமழும் பூந்தோட்டங்கள் வழிப்போக்கர்களுக்கு நிழல்தரும் புண்ணிய ஸ்தல விருக்ஷங்கள் எல்லாவற்றையும் அமைக்கிருர்கள் இவ்விதம் ஊருக்கு எல்லோருக்குமென்று பொதுவாக ஆண்டவனுக்குச் சகல வசதிகளுடனும் அமைக்கப்படும் வீடே ஆலயம் எனப்படும்.

இந்நிலையில் யாழ். வண்ணை வடக்கு நாச்சிமார் கோவில் என்றழைக்கப்படும் காமாக்ஷி அம்மன் கோவில் அவ்வூர் மக்களால் சிறந்தமுறையில் திருத்தி அமைக்கப்பெற்று, 12-5-86 திங்கட்கிழமை [இன்று] நடைபெறவிருர்கும் கும்பாபிஷேகத்தைக் கண்டு களித்தும், பக்தர்களாகிய எல்லோரும் அந்தந்த ஊரிலுள்ள அவரவர் ஆலயத்தை புதுப்பித்து அதிலடும் பணத்தை நம் பிற்சந்ததியினருக்குப் போட்டுவைக்கும் நிதியாக மனதில் கொண்டும் ஆண்டவனின் அருளைப்பெற்று வாழவேண்டுகிருேம். இந்த காமாக்ஷி அம்மன் ஆலயத் திருப்பணியிலீடுபட்ட எல்லோரும் அதில் கைங்கரியங்கள் செய்தோரும், கும்பாபிஷேகத்தை தரிசித்தோரும் கருணை பொங்கும் காமாக்ஷி அம்பிகையின் கடைக்கண் பார்வை பெற்று எல்லா நன்மைகளையும் அடைய வேண்டுமென்று பிரார்த்தித்து ஆசி கூறுகிருேம்.

"அம்பிகையின் அருள் எங்கும் பொலிக!"

சுபம்!

இங்ஙனம்
**இ. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.**

நல்லூர்,
6-5-86.

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீகாமாக்ஷி அம்பாள்


சங்கடம் தீர்த்திடச் சடுதியில்
வந்திடும் சங்கரி சவுந்தரி
காமாக்ஷியே போற்றி!

"ஓம் சக்தி"

**மில்க்வைற் தொழிலகம்**
525/2, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23233

**சாந்தி அச்சகம்**
57၁, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**அம்பாள் வீடியோ சென்ரர்**
804, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ கோணேஸ்வரி பான்சி பலஸ்**
5, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**விங் கல்வி நிலையம்**
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**கிருஷ்ணபிள்ளை அன் சன்ஸ்**
(மோட்டார் உதிரிப்பாக விற்பனையாளர்)
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**ரஞ்சினி ரயர் வேக்ஸ்**
1016 கே. கே. எஸ். வீதி, அரசடிசந்தி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: ஆ. சண்முகம்

**யோகா ரேட்ஸ் சென்ரர்**
133/1, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**ராஜா ரேட் சென்ரர்**
133/3, கே கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**ரவி மோட்டோர்ஸ்**
245, ஸ்ரான்லி, வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22829

**நியூ ராஜா கிறீம் ஹவுஸ் அன் கபே**
64, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**வாணிஸ்ரீ ஜூவெல்லறிஸ்**
2, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: அம்பலவாணர் ஸ்ரீனிவாசன்

**நியூ புஷ்பா ஜுவல்லர்ஸ்,**
284, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## சக்திவழிபாட்டின்நன்மைகள்

கானகதாவாரிதி, பிரம்மஸ்ரீ
**சிவ. வை. நித்தியானந்தசர்மா**

சிவபெருமானிடத்தில் கருணை என்னும் சக்தி அபின்னமாக இருக்கிறது, அச்சக்தியின் தொழில் ஆன்மாக்களை சிவமாக்குவதாகும் அச்சக்தி சிவனைவிட்டு என்றும் நீங்காது அமைந்திருக்கும். அச்சக்தியை சைவமக்களாகிய நாங்கள் பல நாமங்களால் அழைப்போம். உமை, பார்வதி, காமாட்சி, சிவகாமசுந்தரி, மனோன்மணி, முத்துமாரி என்பன சிலவாகும். வண்ணையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அம்பாளின் திருநாமம் காமாட்சி என்பதாகும். அம்பாள் அவ்விடத்தில் எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள். அம்பாளின் கோவில் சிறந்தமுறையில் இராஜகோபுரத்துடன் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. சைவமக்களின் அயரா உழைப்பும், உறுதியான சைவப்பற்றும் போற்றுதற்குரியது. ஸ்ரீகாமாட்சி அம்பாள் அவர்களுள்ளத்திலே கோவில் கொண்டெழுந்தருளி பல அருட்செயல்களையும் நடத்துகிறாள் என்று கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்தவகையிலே இவ்வாலய மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது போற்றுதற்குரியது. தேவியை வழிபடும் சமயம் சாக்தம் என்று சொலப்படும். அன்னை வழிபாடு எல்லா நாட்டிலும் எல்லா மதத்தினராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. சைவசித்தாந்தமும் "தாதையைக் கூடி" என்று சிறப்பாகக் கூறுகிறது காசி சாலாட்சி, காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி எனும் தெய்வத்திருக்கோலம் ஈண்டு நாம் அறிவோம் இம்மூன்று வடிவங்களும் திருநாமங்களும் தேவியின அருட்கருணையை நினையச் செய்யும் தன்மையன இத் திருக்கோலங்களில் மீனாட்சியை கிரியாசக்தி என்றும், காமாட்சியை இச்சாசக்தி என்றும், விசாலாட்சியை ஞானசக்தி என்றும் கூறும் மரபுண்டு அன்னை காமாட்சியை அன்புடன் வழிபடுவோர்க்கு இஷ்டசித்தியை அருள்கிறாள் அன்னைக்கு ஆயிரக்கணக்கான நாமங்கள் உண்டு. ஒருநாமம் போதாதோ என்று சிலர் கேட்கலாம். அவளுடைய கருணையின் விரிவே 1008 நாமங்களாக விரிந்தன. இந் நமங்களில் ஒரு நாமத்தை யாவது தன் குழந்தைகள் தன்னை அழைக்கமாட்டார்களா? என்று அன்னை சக்தியே இத்தனை நாமங்களையும் தன தாக்கிக் கொண்டார். மறந்தாவது அம்மா என்று ஒரு முறை அழைத்துவிட்டால் போதுமே; ஏனென்று கேட்க ஓடி வந்துவிடுகின்றாள். ஸ்திரீ ரூபமாக தெய்வம் உண்டென்பதை நமது வேதம்தான் கண்டறிந்தது. எனக்கு சக்தி இருக்கிறது. நடந்து செல்கின்றேன் என்றெல்லாம் கூறுவதையும் எனக்குச் சக்தி இல்லை, என்னால் காரியம் செய்ய முடியவில்லை என்று கூறுவதையும் காண்கிறோம். அந்த சக்தி உலகெல்லாம் பரவியுள்ளது. அப்படிப்பட்ட சக்தியானவள் உலகங்களுக்கெல்லாம் ஸ்ரீ ஈஸ்வரியாய் புவனேஸ்வரியாய் விளங்கு

(4ம் பக்கம் பார்க்க)

## கௌரி அம்மை தோத்திரம்

இராகம்: ஆரபி தாளம்: ஆதி

**பல்லவி**

கௌரியை மறவாதீர் — உங்கள்
கடமையில் தவறுதீர் — வண்ணைப்பதிக்
(கௌரி)

**அநுபல்லவி**

எழிலுடனே என்றும் எங்கள் குல தெய்வமாய்
வண்ணை காமாக்ஷியென விளங்கி அருள் செய்யும்
(கௌரி

**சரணம்**

ஈழமணி நாட்டிலுள்ள, மாதோட்ட மெனும்நகர்
வாழவைத்த கேதீஸ்வர, அம்மை கௌரியேயாகும்
கௌரி)

அண்ணாமலையி லென்றும், உண்ணாமுலையாய் நிற்பாள்
அம்பலத்தாடல் காண அம்மை சிவ காமியாகும்
(கௌரி)

ஆலவாய்ப் பதிதனில், அங்கயற்கண்ணி யாவாள்
ஆவலுடன் சேவிப்போரை, சிவகதி சேரவைக்கும்
(கௌரி)

காஞ்சிமா க்ஷேத்திரத்தில், காமாக்ஷியம்மை யாவாள்
வாஞ்சையுடன் வந்திப்போர்க்கு, வரமருள் தேவி யாகும்
(கௌரி)

குற்றாலத் தலந்தனில், குழல்வாய்மொழி யுமையாய்
உற்றார் பெற்றாரில்லார்க்கு, உறுதுணை தானே யாகும்
(கௌரி)

— ஆத்மஜோதி வெளியீடு

## கே... கோபுர...

பக்தியினால் பாரினில் ... திடும் மேன்மைகள் ... என்றார் நம் சுப்பிரம... பாரதி. "பக்தி பண்... கொண்டிருந்தால் முக்தி... லாமே" என்றார் கோ... கிருஷ்ணபாரதி. பக்தி... நாம் பேரின்பப் பெ... டைப் பெறுவது மட்டும... இவ்வுலகின் கண் வாழ்வ... வாழ்ந்து பின் வானுறை... வத்துள் வைக்கப்படும்... யையும் பெறமுடியும் ... பேசுகிறது தெய்வத்திரு... திருக்குறள். இவ்வாறு ப... னால் எவ்வளவோ நன்மை... நாம் அடைந்தோம், ... கிறோம், இனியும் ... வோம். இவ்வாறு பக்தி... சாதாரண மானுடர்கள... எமக்கு உறுதுணைய... ஆலயங்கள். நம் நாயன்... களும் ஆழ்வார்களும் ... தரிசனங்கள் மூலமும் ... போது மெய்யுருகிப் ப... அருட்பாக்கள் மூலமும் ... ளைப் பக்திவழி ஈடேற்ற... தாம்பெற்ற இன்பம் ந... பெற அருளியதை ... வோம். ஆதலால் நம்ம... ஒழுக்கிப் பக்திபண்ண உ... ஆலயங்களைக் கட்டு... உள்ளவற்றைப் பேணு... அவசியம்.

இந்தநோக்கில் சமீ... மாக ஈழவ நாட்டின் ஆ... களை பலபல வகை இ... கள் மத்தியிலும் புனருத்... ணம் செய்யப்படுவ... வானளாவிய ராஜகோ... களும் நிர்மாணிக்கப்... அழகும் பொலிவும் ... வருகின்றன. இத்தகைய... யங்களில் ஒன்றான இ... குடமுழுக்குப்பெறும் சா... அம்மாள் ஆலயமும் வி... கிறது.

**கோபுர தத்துவம்**

ஓர் ஆலயத்துக்கு கோ... இன்றியமையாதது. ... தரிசனம் கோடிபாப வி... சனம் என்பர் சமய ... திர அறிஞர். ஆலயமொ... நிர்மாணிக்கப்படும்...


"தனம் தரும் கல்வி தரும் என்றும்
தளர்விலா மனம்தரும் காமாக்ஷி
கடைக்கண்களே!"

**ரூபி ஜுவல்லறி,**
111/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: ச. நந்தகோபால்.
தொலைபேசி: 22744.

"கோயிலின் உள்ளே குடிசெய்து வாழ்பவர்
தாயினும் நல்லார் தரணி முழுதுக்கும்!"
—திருமந்திரம்

**எஸ். சின்னத்துரை அன் பிறதர்ஸ்,**
39, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22703, 22183.

"ஸ்ரீ ...
அ...
9 A, ...

"ஸ்ரீ ...
கிடைக்க...
1/1, மி...
TELE...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ாள் ஆலய மகாகும்பாபிஷேக விழா-சிறப்புமலர்

## கோடி பாபங்கள் போக்கும் கோபுர தரிசனம்

திருமதி ஜி. ஷண்முகடாஸ்
தலையாளி, கொக்குவில்.

ல் பாரினில் எய் மகள் கேளடி சுப்பிரமணிய க்தி பண்ணிக் ால் முக்திபெற றார் கோபால . பக்திசெய்து ப் பெருவீட் து மட்டுமல்ல, ண் வாழ்வாங்கு வானுறை தெய் க்கப்படும் நிலை முடியும் என்று தய்வத்திருமறை இவ்வாறு பக்தியி வா நன்மையை தோம், அடை னியும் அடை று பக்திசெய்த னுடர்களாகிய டறுதுணையாவன ம் நாயன்மார் ர்களும் ஆலய மூலமும் அப் ருகிப் பாடிய மூலமும் மக்க ஈடேற்றத்தில் இன்பம் நமும் யதை அறி ால் நம்மனதை பண்ண உதவும் கட்டுதலும் பேணுதலும்

ல் சமீபகால ாட்டின் ஆலயங் கை இன்னல் ம் புனருத்தா ப்யப்படுவதோடு ராஜகோபுரங் ாணிக்கப்படடு வும் பெற்று இத்தகைய ஆல ன்றுன இன்று பறும் காமாக்ஷி யமும் விளங்கு

கர்ப்பக்கிருகத்தில் அமைவது சூக்ஷ்ம லிங்கமாகும். லிங்கம் என்றால் அடையாளம் எனப் பொருள்படும். இச் சூக்ஷ்ம லிங்கம் பிள்ளையாராகவோ, சிவனாகவோ, விஷ்ணுவாகவோ எந்தத் தெய்வமாகவும் இருக்கலாம் அது நிர்மாணிப்பவர் விருப்பத்தைப் பொறுத்தது. ஆலய வாயிலின் மேல் அமைக்கப்படும் கோபுரம் ஸ்தூலலிங்கம் எனப்படும். ஓர் ஆலயமானது

பார்க்கலாம். ஆலயத்தின் நான்கு திசைகளிலும் வாயில்கள் அமைக்கப்படும். இவ் வாயில்களின்மேல் கோபுரங்கள் அமைக்கப்படும். சில ஆலயங்களில் நான்கு வாயில்களி

அறிந்துகொள்ளுவர். கோபுரங்கள் மூன்றுமுதல் ஒன்பது அடுக்குகள் வரை அமைக்கப்படுகின்றன. அவை ராஜகோபுரங்கள் எனப்படுகின்றன. இவ்விராஜ கோபுரங்கள் கவ

லும் பதினாறு கோபுரங்கள் அமைக்கப்படுகின்றன.

### கலைக்களஞ்சியம்

வெளிப்படையாகத் தெரியும் அடையாளமான ஸ்தூல லிங்கமாகிய கோபுரம் எப்

ர்ச்சியான தெய்வ சிற்பங்களையுடையன என்றுமட்டும் நாம் எண்ணிவிடலாகாது. இவை அவ்வாலயத்துள் எழுந்தருளியிருக்கும் தெய்வத்தின் அவதாரங்கள். திருவிளையாடல்கள், அத்திருவிளையாடல்களின் தத்துவங்கள் போன்ற இன்னோரன்ன பல விடயங்களை நமக்குப் போதிக்கும் ஒரு கலைக்களஞ்சியம்.

இத் தெய்வீக வரலாறு கூறும் சிற்பங்களைவிட கோபுரங்கள் திருஷ்டி தோஷங்கள் முதலியவற்றை நீக்கத்தக்க சில உருவப்பாடுகளையும் கொண்டுள்ளன. கோவிலுக்குள் செல்லமுடியாத வசதிக்குறைவான காலங்களில் கோபுர தரிசனம்மூலம் மக்கள் எவ்வளவோ பாபங்களுக்கு விமோசனம் பெறலாம். இக் கோபுரத்தை நன்ருக நாம் அவதானிக்கின் அங்கு மூன்றோ ஐந்தோ அல்லது ஏழோ அல்லது ஒன்பதோ கலசங்கள் வைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இத்தகைய கோபுரங்களைத் தரிசித்து நம் நாயன்மார்கள், ஆழ்வார்கள் பக்திப் பரவசமடைந்து, மெய்மறந்து பாடி இறையடிசேர்ந்ததை சமய வரலாறுகள் சாற்றிநிற்கின்றன

கோபுர கும்பாபிஷேகம்செய்யும்போது கோபுர கலசங்களில் அந்த ஆலய தேவதைகளை ஆவாஹனம் செய்து யாகங்கள் அமைத்து யாக கலசங்களிலும் அதே தேவதைகளை ஆவாஹனம் செய்து அத் தீர்த்தத்தை கோபுரங்களுக்கு அபிஷேகம் செய்து கும்பாபிஷேகம் நடைபெறும்.

இத்தகைய அருள்பாலிக்கும் ஸ்தூலலிங்கமான ராஜகோபுரமொன்று ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலயத்தில் நமக்கு அபயமளித்துக்கொண்டு கம்பீரமாக அருளாட்சிபுரிகிறது. பல அல்லல்கள், தொல்லைகள் உள்ள இன்றைய சூழ்நிலையில் இன்னலுறும் மக்கள் தலை

(4-ம் பக்கம் பார்க்க)



துக்கு கோபுரம் ந்தது. கோபுர டிபாப விமோ சமய சாஸ் ஆலயமொன்று கப்படும்போது

ஒன்றுமுதல் ஏழு பிரகாரங்களைக் கொண்டு விளங்கும். நம் நாட்டிலும் பார்க்கத் தமிழ்நாட்டில் இவ்வாறு பல பிரகாரங்களைக்கொண்டு விளங்கும் ஆலயங்களைப்

பொழுதும் எல்லா மக்களாலும் தரிசிக்கக் கூடியது. இக் கோபுரத்தை நன்கு பார்த்து வணங்கும் ஒருவர் கர்ப்பக்கிருகத்திலுள்ள சூக்ஷ்மலிங்கம் என்ன தெய்வம் என்பதை


மடற்கமல நறும் பொகுட்டிலரசிருக்கும் அன்னை அருள் அனைவர்க்கும் பெற பிரார்த்திக்கின்றோம்.

"ஓம் சக்தி"
பிறைற் ஸ்ரார் காட்வெயர் ரேட்ஸ்,
(கட்டிடப் பொருள்கள் விற்பனை நிலையம்)
617, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

'வண்ணை காமாட்சி அம்பாள் கருணைவேண்டுகிறோம்'
கே. ஜீ. கோனல்ஸ்,
கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

அம்பிகாபதி பான்சிகுட்ஸ்,
66, கிருன் பஜார், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23437

கற்பகம் மோட்டோர்ஸ்,
1127/1, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்,
உரிமையாளர்: வி.க.இராசதுரை.

நாதன் தொழிலகம்,
91/15, காரைக்காட்டு 2-வது ஒழுங்கை,
வண். மேற்கு, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: எஸ். பரராஜசிங்கம்.
எஸ். பத்மநாதன்.

சுபாகி ஜவுளி மாளிகை,
151, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

மணியம்ஸ்,
16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

செல்வம் சைக்கிள் வேக்
601. கே கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

வேலாயுதபிள்ளை அன் சன்ஸ்,
(பலசரக்கு வியாபாரம்)
630 கே. கே எஸ் வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

யோகராஜா-வரதராஜா (அழகு) நகை தொழிற்சாலை,
227, கே கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

மினி ரேட் சென்ரர்
3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24331

தீபி ஜுவல்லர்ஸ்,
R G. பில்டிங்,
கன்னாரெட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 282, தந்தி: தீபி

"ஸ்ரீ காமாக்ஷி அம்பாளின் அருள் திக்கெட்டும் பரவட்டும்"
அம்பிகாபதி பான்ஸி ரேடர்ஸ்,
9 A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23482, 24822

செல்வம்ஸ்
பற்றறி சேல்'ஸ் அன் சேவிஸ்
443, கே கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23740

"ஸ்ரீ காமாக்ஷி அருள் அனைவருக்கும் கிடைக்க அவள் அடி பணிகிறோம்"
குளோபல்
1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
TELEPHONE TELEX SERVICE

V. K. அன் சன்ஸ்
காபுரேற்றர் திருத்துமிடம்
நாச்சிமார் கோவிலடி
யாழ்ப்பாணம்.

அம்பாள் கபே
நாச்சிமார் கோவிலடி
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ். உலர் சலவையகம்**
644, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

**சர்மிலா போட்டோ**
(படப்பிடிப்பாளர்)
நல்லூர், யாழ்ப்பாணம்.

**கண்ணன் அச்சகம்**
2-ம் குறுக்குத் தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## ஸ்ரீ காமாக்ஷி அம்பாள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சவம். பாவங்கள் தீர்க்கும் தீர்த்தத் திருவிழா அது. அழகிய ர்ஷப வாகனத்திலே அம்பிகை இவர்ந்து வரும் அழகே அலாதி. காணக் கண் கோடி வேண்டும்.

பூரணைக்கு முதல் நாள் இரதோற்சவம். சித்திரத்தேரேறி சிங்காரமாய் பவனி வரும் தோரணை சொல்லில் அடங்காது. அடியார்கள் புடைசூழ அழகுத் தேரானது மணி யோசையுடன் அசைந்துவரும் ஆனந்தம் அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும் கண் கொள்ளாக்காட்சி.

திருமணமாகாத கன்னியர்களும் காளையர்களும் திருமண முடித்த சுமங்கலிகளும் செவ்வாய், வெள்ளி முதலிய நாட்களில் அம்பாள் அடிபணிந்து அவளின் திவ்ய திருநாமத்தைச் சொல்லிச் சிந்தித்து நின்று சேவித்து வந்தித்து நிற்பார்கள்

இன்று குடமுழுக்குக் காணும் நாம் எல்லோரும் உண்மையிலேயே பாக்கியவான்கள். ஆயிரம் அந்தணர்களுக்கு அன்னதானம் வழங்கிய பலன் ஒரு கும்பாபிஷேகம் பார்த்தால் கிடைக்குமாம். ஆகவே அம்பிகையின் ஆனந்தமயமான அருள்வாரி நீதியிற் திளைக்க நமக்கு அரிய தோர் சந்தர்ப்பம்.

'அன்பே சிவம்' என்பதற்கிணங்க அன்புமயமான காமாக்ஷித் தாயின் அருட்கருணை மழையில் நனைய அன்பர்களை அறைகூவி அழைக்கின்றோம்.

'சேர வாரும் ஜெகத்திரே' என அழைக்கின்றோம். அனைரும் அம்பிகையின்கும்பாபிஷேகத்தைக் கண்டு இஷ்டகாமியார்த்த் சதுர்வித பல புருஷார்த்தங்களையும் பெற்றுய்வீர்களாக.

''அம்பிகையைச் சரண்
புகுந்தால்
அதிக வரம் பெறலாம்''

பிரதிஷ்டா பிரதமகுரு,
சிவாகம வித்தியா பூஷணம்
ஊரெழு, சிவஸ்ரீ ச. பா.
வைத்தியநாதசிவாசாரியார்

# நல்லாசிகள்

சிவத்தின் கருணையை அருட்சக்தி என்று ஆகம நூல் கூறுகிறது. அந்த அருட்சக்தி பிரபஞ்சத்தைஇயக்கிக்கொண்டிருக்கிறது. பிரபஞ்சத்தில் உள்ள தாவரசங்கமப் பொருள்கள் யாவற்றிற்கும் அருட்சக்தி தாயாக விளங்குகின்றது ஆயிரம் பெயர் கூறி அன்னையை வழிபடத் தொடங்கும் பொழுது முதலில் ''ஸ்ரீமாத்ரே நம'' என்றுகூறி வழிபட்டு வருவதை நாம் காண்கின்றோம். ''சகல உயிர்களுக்கும் தாயாக விளங்கும் தேவிக்கு வணக்கம்'' என்பது அதன் பொருள். ''குபுத்திரோ ஜாயெதகுவசிதபிகுமாதாநபவதி' என்று ஒரு பெரியார் போற்றியிருக்கிறார். சொற்கேளாத- துட்டப்பிள்ளைகள் பிறக்கக் கூடும், ஆனல் பிள்ளையை வெறுக்கும்தாய் இருக்கமாட்டாள் என்பது இதன்பொருளாகும். இந்தக்குணம் உலக மாதாவாகிய ஸ்ரீகாமாக்ஷிக்கு இயற்கையாகவே அமைந்ததாகும். அந்த அருள்மிகு ஸ்ரீ காமாக்ஷி புண்ணியபூமியாகிய வண்ணார்பண்ணையிலே வாழும் சைவ மக்களுக்கு அந்த இடத்திலே மிகச் சிறப்பாக சிற்ப முறைப்படி அமைந்த அழகிய இராஜகோபுரத்துடன்கூடிய ஆலயந்தன்னில் எழுந்தருளி அருள்பாலித்து 'வருகின்றாள் ஊருக்கு அழகு கோயில் என்பது முதுமொழி. ஆலயங்கள் பல அழகுசெய்ய விளங்குவது வண்ணை திருப்பதி. அப்பகுதியில் உள்ள ஆலயங்களில் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயம் மிகவும் பெருமை வாய்ந்தது. எனவே இவ்வாலய மகாகும்பாபிஷேகம் திருவருள் முன்னிற்க சிறந்தவகையில் நடைபெற திருவருள் கூட்டியுள்ளது. பூரண கிருபையுடன் பொலிவுறும் இவ்வாலய கும்பாபிஷேகத்தைக்கண்டுகளிக்கப்பேராவத்துடன் இருக்கும் தொண்டர்கள், நிர்வாக அன்பர்கள், பொருளுதவிய தருமசீலர்கள், மற்றுள்ள யாவருக்கும் இந்நந் நாளில் எல்லாம் வல்ல ஸ்ரீ காமாக்ஷி அம்பாளின் திருவருளால் எல்லா நலன்களும் பெற்று இனிது வாழும்வண்ணம் இறைவியை வேண்டி நல்லாசி கூறுகிறேன்.

சுபமஸ்து.

## சக்தி வழிபாட்டின்

[2ம் பக்கத் தொடர்ச்சி]

கிறாள். இத்தெய்வத்தின் மகிமையைக் கூற வந்த புராணமே ஸ்ரீதேவி பாகவதம் ஆகும். ஸ்ரீவியாசமுனிவரே தேவியின் அருளைப் பெற்று தான் கோரிய பொருளைப் பெற்றார். அதேபோல் ஸ்ரீஅம்பாளை ஆதரித்து புத்ரலாபம் முதலிய சகல பாக்கியங்களையும் நாம் அடையலாம். சிஷ்யன் குருவிடம் ஆபத்து ஏற்பட்டபோது அதைப் போக்கிக் கொள்ள என்ன செய்ய வேண்டுமெனக் கேட்கிறான். குருவானவரும் ஸ்ரீஅம்பாளுடைய இரண்டு சரணங்களையும் தியானம்செய்ய வேண்டுமெனக் கூறினார். அத்தியானம் என்ன செய்யும் என சிஷ்யன் கேட்டான். பிரம்மா முதலிய தேவர்களையெல்லாம் பக்கத்தில் வந்து என்னசெய்ய வேண்டுமெனக் கேட்குப்படி செய்யுமெனக் கூறினார்.

''ஆபதி இம் கரணீயம்
கரணீயம்
சரணயுகளமம்பாயா!
தத்ஸ்மரணம் கிம் குருதே
ப்ரம்மாதீனபி
சிங்கர குருதே!''

ஜாதகத்தில் சந்திரன், சுக்கிரன், ராகு முதலிய கிரகங்கள் தோஷமுள்ளதாக இருந்தால் தாயின் சாபம், பசுவின் கோபம், சுமங்கலியின் சாபம் முதலியவைகள் நிச்சயமாய்க் குடும்பத்தில் இருக்கக்கூடும். அவை விலகுவதற்கு ஸ்ரீஅம்பாளை அவசியம் ஆராதிக்க வேண்டும். நமது நாட்டில் திருவிளக்கை தேவியாகப் பூசை செய்வது வழக்கம். தீப ஒளியில் தேவியை வழிபட்டால் லட்சுமி கடாட்சமும் சகல மங்களமும் நமக்கு சர்வமங்களையான தேவி அளிப்பாள் எனவே பிரதி தினம் திருவிளக்கேற்றி ஸ்திரீகள் தனித்தோ ஒன்றுகூடியோ மலர்கள் தூவி அம்பாளின் புகழ்பாடி திருவிளக்குப் பூசையைச் செய்யலாம். இத்தகைய சிறப்புகளையுடைய அன்னை ஸ்ரீ காமாட்சி வண்ணையில் எழுந்தருளி அருள் பாலித்துக்கொண் டிருக்கிறாள். அருளோடு பூசையும் கலந்து அருள்வெள்ளமாகப் பாய்வதால் இந்நகரரும் அயலவர்களும் பெருமையும் சிறப்பும் பெறுகின்றார்கள். திருவருள் இங்கே பொழிந்துள்ளது. அம்பிகையின் விழிக்கே அருளுண்டு. அந்த அருள் அவள் கடைக்கண் பார்வையினல் அடியார்களுக்குக் கிடைக்கின்றது. ஸ்ரீ காமாட்சியின் திருவருள் நல்லன எல்லாம் தந்து நடத்துவோரையும், காண்போரையும் பல்லாண்டு வாழ அருள்பாலிப்பாளாக.

சுபம்.

## கோடி பாபங்கள்---

(3ம் பக்கத் தொடர்ச்சி)


நிமிர்ந்து கரம் கூப்பித் தொழுது காமாக்ஷியின் கருணை பெற தெய்வீக களையுடன் காட்சிதரும் இக்கோபுர நிர்மாணம் சைவ உலகில் பாராட்ட வேண்டியதொன்று கும்காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம்வரை தினம் பயணம்செய்யும் தன் பிள்ளைகளுக்கு அன்னை காமாக்ஷி அருள் சுரக்கும் வண்ணம் ஸ்தூல லிங்கமாகக் காட்சியளிக்கிறாள். இவ்விராஜகோபுரத்தைச் சற்று நிதானித்து நின்றுபார்த்தால் அன்னை பராசக்தியின் அருட்செயல்கள் அத்தனையையும் ஒரே காட்சியில் கண்டு பக்திப் பரவசமடையலாம். இன்று நடைபெறும் இக்கோபுர குடமுழுக்கைக் கண்டு கோபுர தரிசனத்தையும்பெற்றுநாம் நம் கோடி பாபங்களில் இருந்தும் விமோசனம்பெறுவோகமாக!

''கௌரி கிருபாகரி துக்க நிவாரணி
காமாக்ஷி அருள் பெற வேண்டுகிறோம்!''

**ராஜா கிறீம் ஹவுஸ்,**
36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

''கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற
அம்பாளை பிரார்த்திக்கிறோம்''

**ரெலி குளோப்**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
TELEPHONE TELEX SERVICE



**''டைமிஷின்''**
'மிஷின் கட்டிங்' வேலைகள் யாவும் சிறந்தமுறையில் செய்துகொடுக்கப்படும்.
**மு.த. பாலகிருஷ்ண பத்தர் அன் சன்ஸ்,**
86, நல்லூர் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

**வைரமாளிகை லிமிட்டட்,**
79, கன்னுதிட்டி,
யாழ்ப்பாணம்.
போன்: 23036

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org